543

ஸ்ரீ

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்:—திவான் பகதூர் டி. டி. ரங்காசார்யர், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 6.] நள ௵ சித்திரை ௴ [ஸஞ்சிகை 3.

த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம்
ததாநே - வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே
ரதிரஸ்து மேऽநவத்யா ॥ [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

## பத்ராதிபரின் குறிப்புகள்

**ஆர்யா பத்ரிகை.** மஹா வித்வானுன அரவிந்த கோஸ் என்பவர் "ஆர்யா" எனும் மாஸாந்தர பத்ரிகையை இங்லீஷில் ப்ரசுரப்படுத்துகின்றூர். இந்தியாவிலும் தேசாந்தரங்களிலும் தத்கால ஐரோப்ய வித்யையை அப்யஸித்தவர்க்குள் அவரைக்காட்டிலும் எற்றமுள்ளவரை நினைப்பதரிது. வேத வேதாந்த மதமானது ஸர்வோத்க்ருஷ்டமான மதமென்பதை இங்க்லீஷ் படித்தவர் அறிந்துகொள்ளும்படி அவர் எழுதுகின்றூராதலால், அந்த விஷயத்தில் அங்யதாப்ரமைகொண்ட மதியுடையோர் முற்றிலும் மதி ப்ரம்சம் அடைவதன் முன்னர் அவர் வசநங்களைப் படிப்பாரென்று நம்புகின்றோம்.

**வேத ரஹஸ்யம்.** அவர் வேத ரஹஸ்யமென்று சில விஷயங்கள் அப்பத்ரிகையில் மாஸந்தோறும் வெளிப்படுத்தியுளர். வேத மந்த்ரங்களுடைய ஏகதேச விவரணம் ப்ராஹ்மணங்களிலும் உபநிஷத்துக்களிலும்

கிடைக்கின்றது. ப்ராசீந ஸம்ப்ரதாய விவரண மெனத் தகும் ஸாயநபாஷ்யம், பூதேந்த்ரியாதிகாரிகளான இந்த்ராதி தேவர்களை உத்தேசித்துச் செய்யப்பட்ட யாகம் முதலான க்ரியா கலாபங்கட்கு ஸஹகாரிகளாக, வேதங்களின் மந்த்ரபாகங்களை விவரித்திருக்கின்றது. இத்தகைய மதம் ஸாதாரண ஜநங்களால் முன் காலங்களில் விச்வஸிக்கப்பட்டதென்றும், அது வேத மந்த்ரங்களின்மேல் ப்ரதிஷ்டித மென்றும், அரவிந்த கோஸ் ஒப்புக்கொள்கின்றார். இவ்விதமாக ஏற்பட்ட ப்ராசீந ஆர்யமதமானது, வேதம் படித்த ஐரோப்பியர் பஹுமாநத்தை அடையாமல், அம்மந்த்ரஸாக்ஷாத்காரம் செய்த ருஷிகளுடைய ஜ்ஞாநமாந்த்யத்தையும் பற்றி அவர் யோசிக்க இடம் தருகின்றது. மந்த்ரங்களில் ஶப்த ப்ரயோகம் க்லிஷ்ட கல்பனையாகவும் ஸுகரமாய் அர்த்தம் விளங்காமலும் இருக்கின்றன வென்றும், பூர்வோத்தர வாக்யங்கள் மேலெழுந்தபடி ஸம்பந்தமற்றுக் கிடக்கின்றனவென்றும், அவற்றின் ஸமுதாயார்த்தம் க்லேசத்தால் நிச்சயிக்கும்படி யிருக்கின்றதென்றும் ஐரோப்யர் சொல்வதை அரவிந்த கோஸுும் அநுவதிக்கின்றனர்.

சிலர் இம்மந்த்ரங்களில் பூர்வாபர விபாகங்கள் செய்து, வேதாந்த விசாரமும் தர்ம நிச்சயமும் ப்ரதிபலிக்கும் மந்த்ரங்கள் காலத்தால் பிற்பட்டனவென்று யோசித்து, அவற்றிற்கும், இதர மந்த்ரங்கட்கும் ஸங்கதியின்மையைக் கண்டதா யெண்ணி, பிற்பட்ட மந்த்ர விஷயங்கள் த்ராவிடரிடமோ, மற்றவரிடமோ, ஆர்ய ருஷிகள் கற்றனரெனச் சொல்லவும் துணிகின்றனர். அம் மந்த்ர காலத்தில் வேதாந்த ஜ்ஞாநம் அங்யத்ர இருந்ததாகக் காண வேண்டுமெனும் நிர்ப்பந்தம் கூட இப்படி யோசிக்கின்றவரைக் கட்டுப்படுத்தவில்லை.

"ஐரோப்யர் நிஜமான வேதமெனக் கொள்கின்ற ருக்வேதத்தில், நிவர்த்திக்கக்கூடாத அநேக கஷ்டங்களை ஆவிஷ்கரிக்கின்ற அத்யந்தம் அநாதியான பாஷையில் அமைக்கப்பட்டவைகளும், யஜ்ஞோபயுக்தங்களுமான பாட்டுகளின் கூட்டத்தைக் காண்கின்றோம். அதில் பிற்பட்ட (ஸம்ஸ்க்ருத) பாஷையில் அகப்படாத ப்ராசீந முறைகளும் பதங்களும் மிகுந்திருக்கின்றன. புத்திமான்களால் அவற்றின் அர்த்தம் கிஞ்சித் ஸம்சயத்துடன் நிஷ்கர்ஷிக்க

வேண்டியதாகின்றது. பிற்பட்ட பாஷையில் வழங்கும் பல பதங்கள் அவ்விடத்தில் பிந்நமான அர்த்தங்களைக் கொள்கின்றன; அல்லது, ப்ருதக்கான அர்த்த சிந்தனைக்கு அவகாஶம் தருகின்றன." என்றெழுதி, வேதபாகங்களில் காணப்பட்ட பஹு ஸாமாந்ய பதங்கள், விசேஷார்த்த ப்ரதிபாதகங்களாய் நின்று, அத்யந்தம் பரஸ்பரம் பேதிக்கின்ற பொருள்களைத் தருகின்றன வென்றும், அப்பொருள்களில் நாம் ஸ்வரஸமா யெண்ணக்கூடியவை, பல வாக்யங்களுக்கும், பல ஸூக்தங்களுக்கும், வேதத்தின் முழுதாத் பர்யத்துக்கும், ஸம்ப்ரதாயாபிப்ராயங்களைக் காட்டிலும் வேறுபட்ட அபிப்ராயங்களை உண்டாக்குகின்றன என்றும் ஆர்யா பத்ராதிபர் முடிக்கின்றார். லோகத்தில் உண்டான பல உத்க்ருஷ்ட மதங்களுக்கும், ஸூக்ஷ்மமான தத்வ நிரூபணங்களுக்கும், இந்த வேதமந்த்ரங்கள் மூலஸ்தாநமாக அங்கீகரிக்கப்பட்டுள என்றும், ப்ராஹ்மணங்களிலும் உபநிஷத்துக்களிலும் இதிஹாஸங்களிலும் புராணங்களிலும் வைஷ்ணவ சைவாகமங்களிலும் ஸாங்க்யாதி தர்ஶநங்களிலும் அடங்கிய தத்வ நிரூபணங்கட்கெல்லாம் வேதம் மூலப்ரமாணமென்பது பஹுஸஹஸ்ர ஸம்வத்ஸரங்களாக நம்பப்படுகின்றது என்றும், வேதமெனும் சப்தத்தின் அர்த்தம் ஜ்ஞாநமென்று ப்ரஸித்தமாயிருக்கிறது என்றும், இப்படிப்பட்ட க்யாதியானது, ஸாயநாசார்ய பாஷ்யப்படியும், ஐரோப்பர் யோசனைகளின் படியும் வேதத்திற்குத் தகாது என்றும் அவர் அபிப்ராயப்படுகின்றார்.

பின்னும் அவர், காரணமின்றிக் கார்யம் உதிக்காதாகையால், உபநிஷத்துக்கு மூலஸ்தாநமான வேதம் அப்படி யிருக்கத்தகாது எனவும், அதன் மூலத்தை அந்யத்ர தேடவேண்டுமெனும் நிர்ஹேதுகமான ஊஹங்கள் படன்படா எனவும், ஆதலால் வேதமந்த்ரங்கள் ஸாமாந்ய ஜநங்கட்கு அவர்க்குத் தக்க மதமொன்றை அளிக்கும்படியாயும், விசேஷார்த்த மறியத்தக்கவர்க்கு விசேஷார்த்த ப்ரதிபாதங்களாகவும் ஸாக்ஷாத்கரிக்கப்பட்டன வெனவும், அந்த விசேஷார்த்தங்களை வெளியிடத் தான் ப்ரயத்நப்படுவதாகவும் அவதாரிகையில் சொல்லுகின்றார்.

இந்த ஸங்கல்பப்படியே சில ஸூக்தங்களைப் பொறுக்கியெடுத்து இங்கிலீஷ் படுத்தியதுமன்றி, அவற்றிற்கு வ்யாக்யாநமாகவும் விஶேஷித்து எழுதுகின்றார். இவையெல்லாம் ஸாதுக்

களுக்கு ஸந்தோஷமுண்டாக்கு மென்பதில் ஸந்தேஹமில்லை. ஸாயநாசார்யருடைய பாஷ்யங்களினின்று அரவிந்த கோஷி னுடைய விவரணம் எவ்வளவு வ்யாவர்த்திக்கின்ற தென்பதை யாம் இவ்விடம் யோசிக்கின்றோ மில்லை; அதற்கு வேண்டிய க்ரந் தாவலோகநமும், பராமர்சையும் தத்காலம் நமக்கு ஸாத்யமன்று. ஆனாலும், மந்த்ரம் என்றால் ரஹஸ்யார்த்தங்களுடன் கூடிய தென் பது தான் கருத்து. மேலெழுந்தவாறாகப் புலப்படும் அர்த்தம் ரஹஸ்யமாகாது. ரஹஸ்யார்த்தம் குருவால் ஶிஷ்யர்க்கு வெளிப் படுத்தத்தக்க தாகையால், பாஷ்யகாரர்களால் வெளிப்படுத்தாமல் விட்டிருக்கக்கூடும். வேதபாஷ்யகாரர் கர்மகாண்ட மந்த்ரங்க ளெனக் கொண்டவைகட்குக் கர்மத்தில் அந்வயிக்கின்றவர்க ளறிய வேண்டியபடி அர்த்தம் செய்திருப்பர். அந்த மந்த்ர ப்ரகரணங் களில் பரமாத்மாவினுடைய அஸாதாரண தர்ம வ்யபதேசமிருந் தால், அவ்விடம் காணப்பட்ட ஸர்வ தேவதா சப்தங்களும் பர மாத்ம வாசகங்களாய் விடுகின்றன. "ஸாதாரணஸ்ய வைஶ்வா நரஶப்தஸ்ய, பரமாத்மாஸாதாரணேந தர்மேண விஶேஷ்யமாணத்வாச" என்று ஸ்ரீ பாஷ்யத்தில் ஸூத்ரவ்யாக்யாந மிருக் கின்றது. அன்றியும், "ஸாக்ஷாதப்யவிரோதம் ஜைமிநி:" எனும் ஸூத்ரப்படி அக்நி முதலான தேவதா நாமங்கள் அவற்றின் அர்த்தங்களைப் பர்யாலோசித்தால், ஸாக்ஷாத்தாகப் பரமாத்மா வையே குறிக்கின்றதாக ஜைமிநிராசார்யர் அபிப்பிராயப்பட்டிருந் தால், ப்ராயேண ஸர்வவேத ப்ரகரணங்களும் பரமாத்மாவை விஷயமாயுடையன வென்று அநேக ஸஹஸ்ர ஸம்வத்ஸரங்களாய் மஹர்ஷிகளால் கொண்டாடப்பட்டிருக்கின்றன. ஐந்நூறு வர்ஷங் களுக்கு மேற்பட்ட ஸந்த்யாவந்தந பாஷ்யங்களால் ஸந்த்யோபா ஸநத்துக்கு உபயோகமான ஸர்வவேத மந்த்ரங்களும் பரமாத்ம விஷயமாகவே வ்யாக்யாதங்கள்.

ஆனால் கர்மகாண்ட ப்ரகரணங்க ளனைத்தும் பரமாத்ம விஷய மென்றும், இந்த்ராதி ஸர்வ சப்தங்களும் பரமாத்ம வாசகமென் றும், அந்த சப்தங்களால் நிர்த்தேசிக்கப்பட்ட தேவதா விசேஷங் களை மறுத்தும், தயாநந்த ஸரஸ்வதி முதலானவர்கள் நூதநமாக வேதார்த்தங்களை ப்ரகாசிப்பிக்கின்றனர். இவர்கள் ஸாயநாசார்யரு டைய பாஷ்யம் முற்றிலும் அபார்த்தம் என்பர். தாங்கள் செய்யும்

அர்த்தம் தான் ப்ராசீந ஆசார்யர்களான யாஸ்கர் முதலானவர் அபி ப்ராயத்தை ஒத்திருக்குமென்பர். இப்படி ஸாயந பாஷ்யங்களை அரவிந்தகோஸ் நிந்திப்பவரன்று. அந்தப் பாஷ்யங்களும் உண்மையாய் இருந்ததோர் கர்ம மார்க்கத்திற்கு அநுகூலமென்றும், அப்படிக் கர்மமார்க்கத்திற்கு உபயோகமாகும் மந்த்ரங்களும் ப்ரஹ்ம விஷயமான கூடார்த்த கர்ப்பமாக இருக்கின்றன வென்றும் அவர் நிச்சயிக்கின்றனர்.

வேதத்தின் கர்ம ப்ரஹ்ம பாகங்கள்.

"அத பரா யயா தத³க்ஷரமதி⁴க³ம்யதே" என்று, உபநிஷத் பாகங்களைப் பரவித்யை யென்றும், ருக்வேதாதிகள் அபரவித்யை யென்றும், இரண்டும் முமுக்ஷுவால் அறியவேண்டியவை என்றும் முண்டகோபநிஷத்தில் சொல்லியிருக்கின்றது. அவ்விடமே, "பரீக்ஷ்ய லோகாந் கர்மசிதாந் ப்³ராஹ்மணோ நிர்வேத³மாயாத்" என்று, வேதத்தில் கர்மபாரத்தை ஒப்புக்கொண்டு அதன்படி அடையக்கூடிய பலங்களில் நிர்வேதம் கொள்ளும்படி உபதேசித்து, "தத்³விஜ்ஞாநார்த²ம் ஸ கு³ருமேவாபி⁴க³ச்சே²த்" என்றாரம்பித்து, "ப்ரோவாச தாம் தத்த்வதோ ப்³ரஹ்மவித்³யாம்" என்று முடித்து, ப்ரஹ்ம வித்யையின் ஏற்றத்தை ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கின்றது.

இவ்விடம், "யாமிமாம் புஷ்பிதாம் வாசம் ப்ரவத³ந்தி" என்றாரம்பித்து, "தாவாந் ஸர்வேஷு வேதே³ஷு ப்³ராஹ்மணஸ்ய விஜாநத:" என்று முடியும், ஸ்ரீமத் பகவத்கீதை, இரண்டாம் அத்யாயம், 42-வது ச்லோகம் முதல் 46-வது ச்லோகம் வரையில், உள்ள வாக்யங்கள் யோசிக்கத்தக்கன. அந்த ச்லோகங்களின் ஸமுதாயமான அர்த்தமாவது:—"ஸ்வர்க்காதி பலன்களைச் சொல்லுகின்ற வேதவாக்யங்களில் ருசியுடையவராயும், ஸ்வர்க்காதிகளைக் காட்டிலும் அதிக்ரமிக்கின்ற பலம் இல்லை யென்று சொல்பவராயும், காமங்களில் ப்ரவணமாகும் மநஸ்ஸுடன் கூடினவராயும், ஸ்வர்க்கமே புருஷார்த்தமென்று எண்ணுகின்றவராயும் இருக்கின்ற அவிவேகிகள், ஸ்வர்க்காதி பலாநுபவத்தின் முடிவில், தாங்கள் செய்த கர்மாந்தர பலமாகப் புநர் ஜந்மத்தைத் தருகின்றதும்,

போகமென்ன, ஐச்வர்யமென்ன, இவற்றை அடைவதற்கு ஸாதநமாகின்ற அநேக க்ரியா விசேஷங்களுடன் கூடியதுமாய் இருக்கின்ற கேவலம் புஷ்பித்த மரமெனப் பார்வைக்கு ப்ரகாசத்துடன் கூடிய யாதொரு இந்த வார்த்தைகளைச் சொல்கின்றனரோ, போகங்களிலும் ஐச்வர்யங்களிலும் இச்சைகொண்டு மேற்சொன்ன வார்த்தைகளால் அபஹரிக்கப்பட்ட மனஸ்ஸுடன் கூடின அவர்களுடைய சித்தத்தில், ஆத்மாவின் ஸ்வரூப நிச்சய பூர்வகமாய் அநுஷ்டிக்கத்தக்க கர்மயோக விஷயமான புத்தியானது ஒருபோதும் உண்டாகமாட்டாது. ஸத்வ ப்ரசுரராயும், ரஜோகுண ப்ரசுரராயும், தமோகுணப்ரசுரராயும் மநுஷ்யர் வேறுபட்டு இருக்கின்றபடியால், அவர் எல்லோர்க்கும் அவ்வவர்க்குத் தகுந்தபடி வேதங்கள் ஹிதங்களைப் போதிக்கின்றன. அர்ஜுநா! நீ த்ரைகுண்யன் (முக்குணமும் கலந்தவன்) ஆகாதே. (ஸத்வப்ரதாநனாய் நில்.) ஸுகதுக்க ஹேதுகங்களான த்வந்த்வமெனப்பட்ட ஸாம்ஸாரிக ஸ்வபாவமற்றவனாய், இதரகுண ஸம்பந்தமற்ற ஸத்வகுணத்திலேயே நித்யம் நிலைகொண்டவனாய், இல்லாத விஷயத்தைத் தேடாமலும், இருப்பதின் ரக்ஷணத்தில் ப்ரவர்த்திக்காமலும், ஆத்ம ஸ்வரூபஸித்தியைத் தேடுபவனாயிரு. தாகமுள்ளவனுக்கு ஜலம் நிறைந்த தடாகம் எவ்வளவு ப்ரயோஜநமாமோ, பரமாத்மாவை அறிந்த ப்ராஹ்மணனுக்கு ஸர்வ வேதங்களிலும் அவ்வளவே ப்ரயோஜநம். அதாவது முமுக்ஷுவுக்கு வேதபாகங்களில் மோக்ஷ ஸாதநமாய் நிற்கின்ற பாகம்தான் வேண்டும். ஸ்வர்க்காதி பலங்களைத் தருவன வேண்டியவையன்று."

இப்படிக் கர்மகாண்டம் ஒன்றுண்டெனவும், அது அல்பமாயும் அஸ்திரமாயு மிருக்கும் ஸ்வர்க்காதி பலங்களைத் தருமெனவும், ப்ரஹ்மகாண்டம் காட்டினவழியே ப்ரஹ்மோபாஸ்தி செய்பவர்க்குத்தான் அநந்தமானதும் ஸ்திரமானதுமான பரமபுருஷார்த்தம் கிடைக்குமென்பதும் முண்டகோபநிஷத்தைப்போல் கீதையாலும் நிச்சயிக்கப்பட்டது. ஆதலால் இப்படி ப்ராசீநமாய் ஏற்பட்ட வேதவிபாகத்தைப்பற்றி ஸாயநாசார்யரைப் பழித்தல் யுக்தமாகத் தோற்றவில்லை.

ஆனால் ஸாதாரணமாக தேவதாஸ்தோத்ரரூபமான மந்த்ரங்கள் பரமாத்மவிஷயமாகவும் உபநிஷத்துக்களில் எடுத்துக்கொள்

ளப்பட்டன. தேவதா நாமங்களும் பரமாத்ம வாசகங்களாக அங்கீ கரிக்கப்பட்டுள. யாவர்க்குள்ளும் அந்தராத்மாவாக நின்று, நியமனம் செய்யும் ஈச்வரனை அவ்வவ்வதிகாரி தேவதா நாமங்களால் ஸ்துதிக்கப் பொருந்தும். நாமங்களின் பதவ்யுத்பத்தியாலும் பரமாத்ம தர்மங்கள் ப்ரகாசிக்கின்றபடியால், ஸாக்ஷாத்தாக அவை பரமாத்ம வாசகங்களாகவும் குறையில்லை. இதை ஸர்வ உபநிஷத்துக்களிலும் காணலாம்.

ஆதலால், போகைச்வர்ய மென்று கீதையில் விவரித்த ஸ்வர்க்கம், தநம், பசு, புத்ராதிகளை அபேக்ஷிப்பவர்க்கும், முமுக்ஷுக்களுக்கும் ஸாதநமாகத்தக்க உபாயங்களையும் ஸ்தோத்ரங்களையும் வேதம் காட்டின தென்றும், தன் அதிகாரத்துக்குத் தக்கபடியே வேண்டிய வேதபாகங்களை ஒவ்வொருவனும் தான் தேடிய ப்ரயோஜநார்த்தமாக அங்கீகரிக்கவேண்டிய தென்றும், பரிமித பலார்த்திகள் அப்பலங்களை க்ஷிப்ரம் தருகின்ற தேவதைகளை அதனிமித்தம் விஹிதமாக நின்ற உபாயங்களைப்பற்றி ஆராதிக்க வேண்டுமென்றும், ப்ரதி புத்தர்கள் மோக்ஷப்ரதனை மோக்ஷத்தின் பொருட்டு உபாஸிக்க வேண்டு மென்பதும் நிஸ்ஸம்ஶயமாய் ஏற்படுகின்றது.

ஸர்வவேத பாகங்களையும் பரமாத்ம பரமாக்கிப் பரமாத்மோபாஸ்தி செய்வதை நாம் பழிக்கின்றோமில்லை.

**அவற்றைப் பற்றிய தத்கால யோசனைகள்.**

யஜ்ஞாதிகளை அதற்குரிய பலங்களை அபேக்ஷிக்காமல் பகவதாராதநமாகப் புரிவதை வேதாந்திகள் அபேக்ஷிக்கின்றனர். “ஹவ்யகவ்யபுக், ஏகஸ்த்வம், வித்யை தேவஸ்வரூபஸுயந்ஸ்”, என்று பகவானை ப்ரஹ்லாதன் ஸ்துதித்தனன். ஆனால் தேவதைகளின் அஸ்தித்வத்தை நிராகரித்து வேதத்தில் சொல்லப்பட்ட ஸர்வ தேவதாநாமமும் பரமாத்ம வாசகமென்று சிலரும், தேவதைகளின் அஸ்தித்வத்தை நிராகரித்தும், அவரிடம் அல்பமாயும் அஸ்திரமாயுமுள்ள ப்ரயோஜநங்களை அர்த்தித்துச் செய்யப்பட்ட யஜ்ஞாதிகளைப் பழித்தும், வேதங்களின் ப்ரமாண பாவத்தையே நிராகரித்தும் ஸமாஜங்கள் ஏற்படுவானேன்?

இது நமது ஜநங்களின் ஸ்வபாவம். கிறிஸ்தவர்கள், நமது மதத்தில் பழிக்கும் அம்சங்கள் அவர் மதங்களிலும் இருக்க, நம் மதத்தை விட்டு அவர் மதத்தைச் சேர்கின்றனரன்றோ? மகம்மதியரில் பாதிரிமார் இன்றியே, நம்மவர் ஏராளமாய் மகம்மதியர் ஆய்விட்டனரே! இப்போது நம் தேசத்தில் யாராவது கிறிஸ்தவ மதத்தைப்பற்றியும் மகம்மதிய மதத்தைப்பற்றியும் தூஷிக்கின்றனரோ? ஆர்யமததூஷகர் ஆர்யராய்ப் பிறந்தவரிலேயே மிகுகின்றனர். இரண்டு கிறிஸ்துவின் சரித்ர விவரணமான காஸ்பல்களை யெடுத்தால், புருஷ பரம்பரையாகக் கிறிஸ்து, டேவிட் என்பவரின் இரண்டு புதல்வரிடம் ஆரம்பித்த ஸந்ததியை வஹிக்கின்றனர். டேவிட் புத்ரர் முதல், கிறிஸ்துவின் பாட்டன் வரையில், இரண்டு பரம்பரையும் பிந்ந புருஷரால் வ்ருத்தியாகின்றன. ஸங்க்யாதீதமான காஸ்பல்களுக்குள், பொறுக்கி யெடுத்த நாலு காஸ்பல்களில் இப்படியும், மற்றபடியும், பல அஸம்பாவித ப்ரலாபங்கள் உண்டு. அக்கால சரித்ரங்க ளெழுதினவர்கள் கிறிஸ்துவின் பெயரையையே குறித்திலரென்று கிப்பன் துரை எழுதியிருக்கின்றனர். 1900 வருஷத்திற்குமுன் நடந்த கதை இவ்வண்ணமாகில், அநேகமாயிரம் வருஷங்கட்கு முற்பட்ட ராமக்ருஷ்ண சரித்ரங்களில் உள்ள ப்ரக்ஷிப்த பாகங்களை யெடுத்துத் தூஷிக்கின்ற நம்மவரைப்பற்றி என் சொல்வோம்? எந்தக் காரணத்தினாலோ பகவான் அவதரிப்பதில்லை யென்று முதலில் அவர்க்கு நிச்சய முண்டாய்விட்டபடியால், அவதார கதைகளாக இதிஹாஸங்கள் முதலில் உண்டாகவில்லை யென்பர். ப்ராசீநமாய் இவை வால்மீகி வ்யாஸ க்ருதமென்று ஸம்ப்ரதாயம் ஏற்பட்டிருக்க, அவை அவர்க்குப் பிற்பட்ட காலங்களில் பேர் தெரியாத யாரோ சிலரால் கல்பிதமென்பர். ப்ரக்ஷிப்த ப்ரகரணங்களில், கதா காலத்தில் அஸம்பாவிதமான அம்சங்கள் சொல்லப்பட்டால், இதிஹாஸங்கள் பின் காலங்களில் மாற்றி யெழுதப்பட்டன வென்பர். பௌத்தரும் ஜைநரும் ஸ்ரீராமனையும் ஸ்ரீக்ருஷ்ணனையும் அவதார புருஷராகத் தம் கதைகளில் எழுதியிலர்; ஆதலால் நமது பூர்வீகர் தாம் அவ்வண்ணம் பொய்யாக எழுதினர் என்பர். ஈச்வரனையே பௌத்தரும் ஜைநரும் ஒப்புக்கொள்ளவில்லையே; அவனுடைய அவதரணத்தை எவ்வண்ணம் அவர் ஒப்புக்கொள்வர்?

அவை தோஷக்ருதம்.

அவர் நம்பாத ஈச்வரனை நமது தூஷகரும் மறுக்கக்கூடாதோ வென்ருல், மறுக்கார்; ஏனெனில் கிறிஸ்தவர் ஈச்வரனை ஒப்புக் கொள்கின்றனரே; அதனல் தாமும் ஒப்புக்கொள்வர்போலும். தசரதஜாதகமெனும் பௌத்த கதையானது பொருத்த மில்லாத ஆபாஸமென்பது ஏன் அவர்க்குப் புலப்படவில்லையோ? பௌத்த க்ரந்தங்களில் புத்தனை ருத்ரனுக்கும் க்ருஷ்ணனுக்கும் ஒப்பிட்டு எழுதியிருக்கின்றது. தசரதஜாதகத்திலேயே புத்தன் தான் பூர்வ ஜந்மத்தில் ஸ்ரீராமனக இருந்ததாகச் சொன்னதாய்க் கண்டிருக்கின் றது. இதனலும் ஸ்ரீராமனும் க்ருஷ்ணனும் அவதார புருஷ ரெனப் புத்தன் காலத்தில் விச்வஸிக்கப்பட்டாரென்பது ஏற்பட வில்லையா? அவர்க்கு அக்காலங்களில் தேவாலயங்கள் உண்டென் பது க்ரீக் தேசத்தார் எழுத்தாலும், ருக்விதாநமெனும் க்ரந்தத்தா லும், பாஞ்சராத்ராதி ஸம்ஹிதைகளாலும் ஸித்தமன்ருே?

பழைய புஸ்தகங்களை மாற்றிப் புதியவையாக யாராவது எழுதிவிட்டால், யாவத் ஜநங்களும் அதை ஒப்புக்கொள்வரோ? அவதாரமெனும் யோசனைக் கிடமற்ற காலத்தில் ஒருவன் அவ்வித யோசனையைக் கல்பித்தானகில், அதைத் தேசமெங்கும் நம்பிவிடு வரோ?

இப்படியெல்லாம் யோசிக்காமல் விபரீத புத்தியைக் கொள் கின்ற ஸமாஜங்களைச் சேர்ந்தவர் தேவர்களுடைய அஸ்தித்வத்தை நிராகரிப்பது ஸஹஜந்தானே. ஒரு உண்மையான தேவனைப் பற்றிச் சொல்பவரும், 'ஸஹஸ்ராணீ ஸஹஸ்ரசஸோ' என்று வேதம் சொன்னவண்ணம், அவனுக்குப் பகு ஏஞ்ஜலெனப் பெயர்கொ ண்ட தூதர்களைத் துணையாக்குகின்றனர். ஸர்வவ்யாபியான ஈச் வரனுக்குத் தூதர் வேண்டப்பட்டார்போலும். இவரை நம் ஸம் ப்ரதாயஸ்தர் ஒப்புக்கொள்ளும் நித்யருடன் ஒப்பிடலாம். நித் யர்க்கும் முக்தர்க்கும் அத்யந்தம் நிஹீநரான தேவதா வர்க்கங் களையும், அவருடைய ஆராதநமாய் உத்பந்நமான யாகங்களையும் மறுப்பதேனே? இது ஸம்ஸர்க்க தோஷம். தேவரை நம்பினல், ஈச்வர பாஹுள்யத்தை நம்புவதாகக் கிறிஸ்தவர் சொல்லிவிட் டார். அதனல் இவரும் அந்த நம்பிக்கையை விட்டனர். மர ணாநந்தரம் ஜீவனுடைய இருப்பை நம்பாமலும், இவ்வுலகில் நச்ச ரங்களையே தேவனிடம் அபேக்ஷித்தும், முதலில் யூதர் வளர்ந்த

னர். தேவதாந்தரங்களிடம் ஸ்வர்க்காதி பலன்களையும் ஐஹிக ஸுகங்களையும் அபேக்ஷித்து, நம் முன்னோர் யாகம் செய்தனரா யின் பாதிரிமார் இகழ்ந்தார்கள். நம்மவர் வெட்கப்பட்டார்கள். இந்த யாகங்களின் மஹிமை யாதொன்று மின்றித் தேவனுக்கா கப் பலிஜந்துக்களைக் கொன்று யூதர் செய்த பூஜைகளை இவர் யோ சித்தாரில்லை. இவர்க்குள் சிலர் கிறிஸ்தவரானார். சிலர் ஸமாஜம் உண்டாக்கினார். பாதிரிமார் சொல்படி, உண்மையான ஒரு தே வனை இவர் தொழுவதாகச் சொல்வர்; தேவரையும் பித்ருக்களை யும் நம்பினவரைப் பார்த்து, அவர் இருப்பை ருஜுப்படுத்தக் கேட்பார்கள். உண்மையான ஒரு தேவன் இருப்பு இவர்க்கு ருஜு வாய் விட்டதுபோலும். மநுஷ்யர்க்கும் இவர் காணாத தேவனுக் கும் மத்யே ஜீவன்கள் இருப்பதும் இல்லாமையும் இவர் மனத்தை ப்ரமப்படுத்த மாட்டாதோ? மனிதர் இறந்தால், கிறிஸ்தவர் அவ ரில் சிலரை ஶாஶ்வதமாய்ப் பரமண்டலத்துக்கும் பலரை ஶாஶ் வதமாய் எரிகின்ற நரகத்துக்கும் பகுத்து அனுப்புகின்றனர். விஶ் வாஸம் கெட்ட ஹிந்துக்கள் அவ்விஷயத்தில் என் சொல்வரோ? முக்தர் மோக்ஷத்துக்குப் போவார் என்றும், புண்யம் செய்த பத்த ஜீவர் ஸ்வர்க்காதி லோகம் போவார் என்றும், அவர்க்குள் சிலர் மஹா ஸுக்ருதம் செய்து இந்த்ராதி தேவர்களுடைய பதவியை அடைகின்றனர் என்றும், பெரும்பான்மையோர் இவ்வுலகில் மறு படியும் பிறக்கின்றாரென்றும், இவ்விதமாய் நமது மதம் சொல் வதை இவர் நகைக்கக் காரணமென்னே? இது அஸம்பாவிதமா? லோகாதிகாரம் பெற்ற தேவதைகள் லோகஹிதத்தைச் செய்பவ ராய், லோகத்தார் அவர் நிமித்தம் செய்த பூஜைகளை அங்கீகரித்த னர். இப்போது பதார்த்த ஸூக்ஷ்மங்கள் அறிந்த மனிதர், தம க்கு வேண்டிய ஐஹிக ஸுகங்களைத் தேவர்களுடைய அநுகூல மின்றிக்கே அடைகின்றாராதலால், இப்போது தேவரைப்பற்றி அவர்க்கு ஆகவேண்டியதொன்றுமில்லை. ஆஸ்திகர்கள் பகவதா ஜ்ஞையைப் பகுமாநித்துப் பகவதாராதநமாகத் தேவதா ஸம் பந்தமான சில வைதிக கர்மங்களைச் செய்கின்றனர். இக்கர்ம ஸமூஹங்களிலும் தேவதைகளிலும் அவிஶ்வாஸத்துக்குக் கார ணம், தத்காலம் பெருகப்பட்ட நாஸ்திகை தான். இது நிஜம். உண்மையான ஒரு தேவன் மறுக்கப்பட்டிலன் என்றால், அது, பாஷன் (Fashion) எனப்பட்ட லோக ஸங்க்ரஹத்தால் எற்

பட்டதேயன்றி, அபரோக்ஷத்தின்பேரில் ஏற்பட்ட விச்வாஸத்தாலன்று சிலர் யாவருமறிய அவனையும் மறுக்கின்றனர்.

நமது அநாதி ஸம்ப்ரதாயத்தின் ஏற்றம்.

ஆதலால் ப்ரக்ருதி, சேதநவர்க்கம், ஈச்வரன் எனப்பட்ட தத்வத்ரயங்களை ஒப்புக்கொண்டு, சேதநருடைய நித்யத்வத்தையும், பத்த ஜீவர் மரணாநந்தரம் அநுவர்த்திப்பதையும் ஒப்புக்கொள்ளும் ஆஸ்திகர் வைதிக மதத்தைத் தூஷிக்கமாட்டார். அதைப்போல் யுக்தி யுக்தமாகவும், ஸம்சய நிவாரகமாகவும், தத்வங்களின் ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்தி பேதங்களை மற்றோர் மதம் ப்ரகாசிப்பிக்கமாட்டாதென்பதையும் ஒப்புக்கொள்வர். நாஸ்திகவாதம் நமது பூர்வாசார்யரால் ஸம்யக் நிரஸநம் செய்யப்பட்டது. ஆதுநிக நாஸ்திகர்களும், ஸமாஜத்தினர்களும், மதாந்தரஸ்தர்களும், வாதங்களில் ஜயித்துத் தம் கக்ஷியை ஸ்தாபித்திலர். ஸம்ஸர்க்காதி தோஷங்களும், போகேச்சையும், இவர் மநஸ்ஸுகளைப் பள்ளமடையில் இறங்கச்செய்தன. தத்காலம் அவர் ஸந்தோஷிக்கும் மித்யா ஸுகங்கள், பரமார்த்த ஸ்வரூப சோதனைக்கு அவர்க்கு அவகாசங் கொடுத்தில. பரமார்த்த ஸ்வரூபத்தில் மநஸ்ஸைச் செலுத்துபவர், எவ்வளவு நன்றாய்ப் போதித்தபோதிலும், அவர் வார்த்தைகள் நாஸ்திகர் மநஸ்ஸில் இழியமாட்டா. ஆனாலும், சிலராகிலும் அவர் வார்த்தைகளில் ப்ரமாண பாவத்தைக்கொண்டு, ஸத்வர்த்மாவில் நடக்கக்கூடுமன்றோ? ஆதலால் அரவிந்தகோஸ் செய்யும் முயற்சியை யாம் மிகவும் ஸந்தோஷிக்கின்றோம்.

ஸ்ரீ:.

ஸ்ரியை நம:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:.

# பண்டிதர்கள்.

சென்ற ஸஞ்சிகையில், சில லௌகிகர்கள், நமது தேசத்து பாஷா பண்டிதர்களை நிஷ்காரணமாக வெறுக்கிறார்களென்றும், அப்படி அவர்கள் வெறுப்பது நமது தேசத்திற்கு ச்ரேயஸ்கரம் அன்றென்றும் நாம் சொன்னோம். 'நமது தேசம் வ்ருத்திக்கு வருவதானது, இந்த லௌகிகர்கள் ப்ரமித்திருப்பது போல ஹூணர்களுடைய நடை உடை பாவனைகளை நாம் அநுகரிப்பதைச் சார்ந்தது அன்று; ஆனால், நமது சாஸ்த்ரங்களிற் சொல்லியிருக்கிறபடி, நாம், தம் தமக்கு உரிய தர்மாநுஷ்டாநங்களைச் செய்ய முயல்வதைச் சார்ந்ததே' என்பது தான் நாம் அப்படி சொன்னதற்குக் காரணம். கால வைபரீத்யத்தின் பலமாக நமது அநுஷ்டாநங்களெல்லாம் தடுமாறி நிற்கின்றன; அவை சீர்திருத்தத்தை அடையவேண்டுமானால், அவைகள் சொல்லப்பட்டிருக்கும் சாஸ்த்ரங்களையும் அந்த சாஸ்த்ர ஸம்பத்தங்களான மற்றை க்ரந்தங்களையும் பரிசீலநம்செய்து அவைகளிற் சொல்லியிருக்கிறபடி அநுஷ்டிக்கும் திறமையுடைய பண்டிதர்களின் அவலம்பத்தைக் கொண்டே அது ஆகவேண்டும். ஆகையால், நமக்கு முக்கிய அவலம்பமாக இருக்கும் அந்தப் பண்டிதர்கள் நசிப்பதை நாம் ஸஹிக்கிறோமில்லை.

ஆனால், பண்டிதர் என்று இப்பொழுது பெயர்பூண்டிருக்கும் எல்லாரும் அப்படிப்பட்ட ஸத்காரத்திற்கு அர்ஹர்கள் என்று நாம் சொல்வது ஸாத்யமில்லை. பாண்டித்ய கந்தமே இல்லாமலிருக்கும் சிலர், தாமும் பண்டிதர் என்று அநேகம் ஸாமாந்ய ஜநங்களை மோசம்செய்வதையும், ஜந்மாந்தர வாஸனையி

555.-658
555



ஞலோ ஆசார்ய அநுக்ரஹத்திஞலோ பாஷா ஜ்ஞாநத்தையும் ஶாஸ்த்ரஜ்ஞாநத்தையும் பூர்ணமாக அடைந்திருக்கும் சிலர், தாம் படித்துள்ள ஶாஸ்த்ரங்களில் எவ்வித விஶ்வாஸத்தையுங் கொள்ளாமலே, தர்மாநுஷ்டாநத்திலிருந்தும் ஸதாசாரத்திலிருந்தும் நழுவினவர்களாய் அஸத்யவசநம் பரத்ரவ்யாபஹரணம் முதலிய மஹா பாதகங்களை எவ்வித கூச்சமுமின்றிக்கே செய்து கொண்டு வருவதையும் நாம் அறிவோம். அவர்களை ஸத்கரிக்க வேண்டுமென்ருவது, அவர்களிடத்தில் இருக்கும் தோஷங்களை போக்யங்களென்று பாவிக்கவேண்டுமென்ருவது நாம் சொல்ல வரவில்லை. நன்னடத்தை யற்றிருக்கும் ஒருவனுடைய பாண்டித்யம் எவ்வித ஸத்காரத்திற்கும் அநர்ஹமே.

“ ஶுந: த்ருதாவிவ ந்யஸ்தம் வாணிஜ்யம் யதுபார்ஜிதம் ”

என்றும்

“ கபாலஸ்தம் யதா தோயம் ஶ்வத்ருதௌ ச யதா பய: ।
துஷ்டம் ஸ்யாத் ஸ்தாநதோஷேண வ்ருத்தஹீநே ததா ஶ்ருதம் ॥ ”

என்றுமன்ருே நமது ஶாஸ்த்ரங்கள் உத்கோஷிக்கின்றன? கேவலம் பண்டிதர்களை நாம் புரஸ்கரிக்கின்ருேமென்றும், ஜ்ஞாநியினிடத்தில் வ்ருத்த ப்ரம்ஶம் இருந்தாலும் நாம் அதை அவ்வளவாகப் பாராட்ட வில்லையென்றும் நமது லௌகிக ஸுஹ்ருத்துக்கள் நம்மைப் பற்றி க்ரஹித்திருக்கக்கூடும். அது தவறுதலான எண்ணம்.

“ ஆசாரஹீநம் ந புநந்தி வேதா
யத்யப்யதீதா: ஸஹ ஷட்பிரங்கை: ।
சந்தாம்ஸ்யேநம் ம்ருத்யுகாலே த்யஜந்தி
நீடம் ஶகுந்தா இவ ஜாதபக்ஷா: ॥ ”

‘ஒருவன் வேதாத்யயநத்தை ஸாங்கமாகச் செய்திருந்தாலும், துராசாரனுக இருந்தால் அவன் அந்த வேதாத்யயநத்திஞல் எவ்வித பலத்தையும் பெறுகிருனில்லை; இறகு முளைத்த பக்ஷிகள் தங்களுடைய கூட்டை த்யஜிப்பதுபோல, தேஹ வியோக காலத்தில் இந்த வேதங்களும் அவனை த்யஜிக்கின்றன’ இத்யாதிகளான

பரஸ்ஸஹஸ்ர வாக்யங்கள் வ்ருத்தத்தின் கௌரவத்தை விஸ்த ரிக்கையில், அவைகளுக்கு விருத்தமாக நாம் எவ்விதத்தில் துராசார ஶீலனாக இருக்குமவனை ஶாஸ்த்ரத்தை அதிலங்கநம் செய்யாமல் ஆதரிக்கக்கூடும்? மற்றை ஜநங்களின் விஷயத்திற்போலப் பண்டி தர்களின் விஷயத்திலும் நாம் குணதோஷ விவேசநஞ் செய்ய வேண்டுமென்பதும், அப்படி விவேசநஞ் செய்த பிறகு குணிக ளாகக் காணப்படும் பண்டிதர்களை ஆதரிக்கவேண்டு மென்பதும் தான் நம்முடைய ப்ரார்த்தனை. கேவலம் பண்டிதர்கள் என்னும் காரணத்தைக் கொண்டு மாத்திரம் அவர்களை வெறுக்கக்கூடாது என்றே நாம் கேட்டுக்கொள்ளுகிறோம்.

இப்படிப்பட்ட ஸாதுக்களான பண்டிதர்களின் அபிவ்ருத்தி யே நமக்குப் பரமமான ச்ரேயஸ்ஸை ஸாதித்துக்கொடுக்கத் தகுந்த உபாயமானல், அந்த உபாயத்தில் நாம் எவ்விதமாக ப்ரவ் ருத்திக்கலாம் என்பதைப்பற்றி ஆலோசிப்பதுதான் நமக்கு இப் பொழுது ப்ரக்ருதமாக இருக்கின்றது. இதைப்பற்றித் தீர்க்கா லோசனை செய்திருக்கும் அநேகர், பலவிதமான ப்ரவ்ருத்தியைப் பற்றிப் பலவிதமாகப் பேசியிருக்கிறார்கள். அப்படி அவர்க ளால் காண்பிக்கப்பட்டிருக்கும் மார்க்கத்தில் சிலர் துணிந்து தமது ச்ரமத்தையும் க்லேஶத்தையும் பார்க்காமல் இறங்கியும் இருக்கிறார்கள். ஆனல், நமது சிற்றறிவுக்கு எட்டின வரையில், இந்த மார்க்கமொன்றும் நமது இஷ்டத்தைப் பூர்ணமாக ஸாதித் துக்கொடுக்கத்தகுந்த தன்றென்றும், ஸ்வல்பமும் க்ஷணிகமு மான ப்ரயோஜநத்தையே உடையதென்றும் தோன்றுகின்றது. பூர்ணமான ஸித்தி கிடைக்கவேண்டுமானல், அதற்கு மார்க்கம் வேறு. அதைப்பற்றி மாத்திரம் இப்பொழுது நாம் விஜ்ஞாபநம் செய்துகொள்ளத் துணிகின்றோம். ஒருகால், சிலர், அதை அஸா த்யமென்று நினைக்கலாம். நமக்கு அவ்விதமாகத் தோன்ருமலிருப் பதனுலும், ப்ரக்ருதமான ஸ்வதேஶபாஷையின் அபிவ்ருத்தி மாத் திரமின்றிக்கே நமது ஸர்வவித ச்ரேயஸ்ஸும் அதைச் சார்ந் திருப்பதாக நமக்குத் தோன்றுகிறபடியாலும், அதைப்பற்றி இப் பொழுது ப்ரஸ்தாவிக்கத் துணிகின்றோம். மஹான்களெல்லாரும், அதைச் சற்று மனத்தில் வாங்கிக்கொண்டு, அதன் ஸாதுத்வத்தை விசாரித்து, அதில் இருக்கும் குறைவுகளைப் பூர்த்திசெய்து, இப் பொழுது நமக்கு நேர்ந்திருக்கும் துர்தஶையை நிவ்ருத்திக்க எவ்

விதத்திலாவது ப்ரவ்ருத்திக்க முயலவேண்டுமென்று நாம் ப்ரார்த்திக்கிறோம்.

இக்காலத்தில் அநேக காரணங்களடியாக தேஹயாத்ரையை அதிகமான மானபங்கமின்றிக்கே நடத்திக்கொள்வது மிக ச்ரம ஸாத்யமாக இருக்கின்றது என்பதை எல்லாரும் அறிந்திருக்கக் கூடும். கேவலம் தேஹதாரணத்திற்காக வேண்டுவனவான ஸாதாரணப் பொருள்கள்கூட ச்ரமமின்றி அகப்படுவது அரிதாகிவிட்டது. லௌகிக வ்யாபாரங்களில் திறமையை ஸம்பாதித்திருக்கும் ஜநங்களும் இம்மாதிரி ச்ரமப்படுவதை நாம் அறிவோம். இப்படியிருக்க, எவ்வித லௌகிக ஸாமர்த்யமுமில்லாமல் கேவலம் பாண்டித்யத்தை மாத்திரம் அவலம்பித்திருக்கும் பண்டிதர்கள் ச்ரமப்படுகிறார்கள் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? பாண்டித்யத்தையும் சாஸ்த்ரோக்த அநுஷ்டாநாதிகளையும் ஆதரிப்பவரை இக்காலத்திற் காணோம். பெரியவைபான பால குடும்பங்களை வைத்துக்கொண்டு அவைகளைச் சரிவரப் போஷிக்கக் கூடாமல் வருந்தியும், அசாஸ்த்ரீயமான வ்ருத்தியில் இறங்குவதற்குக் கூசியும், எப்படிப்பட்ட கஷ்டம் நேர்ந்தபோதிலும் தர்மத்தைப் பாதுகாப்பதே பெரிதென்று எண்ணிக்கொண்டும், தாரித்ர்யத்தினாலும் க்ஷாமத்தினாலும் அஸஹ்யங்களான க்லேசங்களை அநுபவிக்கும் பெரியோர்கள் அநேகர் இருப்பதை எல்லாரும் பார்க்கலாம். ஒரு பக்கத்தில் பசி வருத்தவும், மற்றொரு பக்கத்தில் மானமும் சாஸ்த்ரபயமும் பாதிக்கவும், இன்னுமொரு பக்கத்தில் குடும்ப க்லேசங்கள் மனத்தைப் புண்படுத்தவும், இம்மாதிரியான தாபங்களின் நடுவில், கொழுந்து விட்டெரியும் விறகின் நடுவில் அகப்பட்டுள்ள புழுப்போலத் துடித்து நிற்கும் ஜநங்களுக்குப் பாண்டித்ய ஸம்பாதநத்திலும் வித்யாபிவ்ருத்தியிலும் எவ்விதத்தில் புத்தி ப்ரவ்ருத்திக்கும்? இவ்விதங்களான க்லேசங்களுக்குக் கொஞ்சம் ஆறுதலையாவது நாம் தேடிக்கொடாமலிருக்கும் வரையில், 'பண்டிதர்கள் வ்ருத்தியாக வேண்டும்' என்று நாம் ப்ரார்த்திப்பதெல்லாம் வீணேயாகாதோ? ராஜ பாஷையைப் படித்து அத்ருஷ்ட விசேஷத்தினால் உயர்ந்த பதவியைப் பெற்றிருக்கும் ப்ரபுக்களுக்குப் போல இவர்களுக்கும் லக்ஷ்மீ கடாக்ஷம் ஸம்பவிக்க வேண்டுமென்று நாம் கோராமற் போனாலும், அந்ந வஸ்த்ராதிகளுக்கு அபேக்ஷிதமான அளவாவது தந வருமானத்தை

நாம் செய்துவைக்க ப்ரவ்ருத்தித்தால் தான், நம்மால் கோரப் படும் மார்க்கத்தில் அவர்களை இறங்கச்செய்வது ஸாத்யமாகும். அவர்கள் ஸம்பாதித்துக்கொள்ளும் வித்யை அவர்களுடைய ஜீவ நத்திற்கு ஒருவித ஸாதகமாகாவிட்டால் அவர்கள் கூச்சமற்று அதில் ப்ரவ்ருத்திக்கமாட்டார்கள் என்பது திண்ணம். இப்படி அவர்களுடைய பாண்டித்யத்தை அவர்களுக்கு ஒரு ஜீவநோ பாயமாகச் செய்துவைக்கவேண்டும் என்பது தான் நமக்கு இப் பொழுது க்ரமப்ராப்தமாக இருக்கும் தர்மம் என்று அடியேன் விஜ்ஞாபநம் செய்துகொள்ளத் துணிகின்றேன்.

இதைச் சரியாக அறியாமலிருக்கும் சிலர், 'பாடசாலைகளை ஏற்படுத்துவது வித்யாபிவ்ருத்திக்கு ஓர் உபாயம்' என்று எண்ணிச் சிற்சில விடங்களில், ஸ்வதேச பாஷா பாடசாலைகளைக் கல்பிப்பதை நாம் பார்க்கிறோம். அந்தப் பாடசாலைகளில், எவ் வித சம்பளமுமின்றிக்கே வித்யை படிப்பிக்கப்படுவதுடன்கூட, அப்படிப் படிக்கவரும் மாணவகர்களுக்கு ப்ரதிதிநமும் அந்நம் அளிப்பதற்கு வேண்டுவதான வ்யவஸ்தையும் ஏற்படுத்தப்பட் டிருக்கின்றது. இவ்வளவு ப்ரோத்ஸாஹநம் இருக்கையிலும், அந் தப் பாடசாலைகளுக்கு வித்யார்த்திகள் பூர்ணமாக வருவதைக் காணோம். சில மிக்க எளியவர்கள் மட்டில், தத்காலத்தில் அந் நம் அகப்படுகின்றது என்னும் காரணத்தைக் கொண்டு தமது ப்ரஜைகளை அந்தப் பாடசாலைகளுக்கு அனுப்புகிறார்கள். அந்த ப்ரஜைகளும் அந்நம் அகப்படுங் காலம் முழுவதும் அவ்விடத்தில் இருந்துவிட்டு, பிறகு, தமக்கு உபதேசிக்கப்பட்ட வித்யைகளைச் சிறிதேனும் கணிசியாமல், வேறு அநுசிதங்களான வ்ருத்திகளில் இறங்குவதை நாம் பார்க்கிறோமல்லவா? இந்த ப்ரவ்ருத்தி எவ் விதத்தில் நமது மநோரதத்தை நிறைவேற்றிக் கொடுக்கும்? பாட சாலைகளில் படித்து வெளிவரும் மாணவகர்களுக்கு, அவர்க ளால் ஸம்பாதிக்கப்பட்டுள்ள ஜ்ஞாநம் உபயோகப்படும்படியான சில வ்ருத்திகளை நாம் கல்பித்தாலன்றோ அப்பொழுது நம்மு டைய வேறுவித ப்ரோத்ஸாஹநமின்றிக்கே ஆயிரக் கணக்காக ஜநங்கள் அந்த வித்யையில் ப்ரவ்ருத்திப்பார்கள்?

இங்க்லிஷ் பாஷையை அப்யஸிப்பதற்கும் அதில் தேர்ச் சியை அடைவதற்கும் ப்ரோத்ஸாஹநம் ஏதாவது நடக்கின்ற

தோ? அதில் ஜனங்களுக்கு ஏற்பட்டிருக்கும் ப்ரவ்ருத்தியைக் குறைப்பதற்குப் பல பெயர்கள் பலவிதமாக முயற்சிசெய்வதை நாம் பார்க்கவில்லையா? இங்க்லிஷ் பாஷை போலவே, நமது தேஶ பாஷாபரிசயமும் வ்ருத்தி ஜநகமாக இருந்தால், இந்த பேரச்ய தஶை இந்தப் பாஷைகளுக்கு ஸம்பவிக்காது என்பது நிச்சயம். ஆகையால், நமது பாஷைகளின் அபிவ்ருத்தியைத் தேட முயல்வோரெல்லாரும் இப்பொழுது இங்க்லிஷ் பாஷையால் நமது தேசத்தில் அநுபவிக்கப்பட்டுவரும் புரஸ்காரத்தை நமது பாஷைகளுக்கு ஸம்பாதித்துக்கொடுத்து, அந்தந்த ராஜதாநியின் ஜநங்கள் அவரவர்களின் பாஷையில் லோக வ்யவஹாரத்தை நடத்தும்படியாகவும், அந்தந்த ஸ்தலத்து அதிகாரிகளும் அந்தந்த ஸ்தலத்துக்குரிய பாஷையைக் கற்றுக்கொண்டு அந்தந்தப் பாஷையின் வழியாகவே ஸகல நடவடிக்கைகளையும் நடத்தும்படியாகவும், அப்படியே பாடசாலைகளிலும் ஸகல ஶாஸ்த்ரங்களும் தேசபாஷையைக் கொண்டே கற்பிக்கும்படியாகவும், இங்க்லிஷ் பாஷையை ஓர் உபபாஷையாகமட்டில் எல்லாரும் அப்யஸிக்கும்படியாகவும், இவ்விதமான ஒரு வ்யவஸ்தையை ஏற்படுத்த முயலவேண்டுமென்பதுதான், நமது மநோரதத்தைச் சரியாக ஸாதித்துக்கொள்வதற்கு உசிதமான ப்ரவ்ருத்தியென்று நமது சிற்றறிவுக்குத் தோன்றுகின்றது.

இந்த வ்யவஸ்தை அஸாத்யமன்று என்பது இதைப்பற்றிச் சற்று ஆலோசித்துப் பார்ப்பவர்க்கு நன்கு விளங்கும். இன்னும் நன்றாக ஆலோசித்துப் பார்க்குமவர்கட்கு, 'இது தானே ந்யாய்யம்! ந்யாய விருத்தமான வேறு வ்யவஸ்தை எப்படி ஏற்படுத்தப்பட்டது?' என்று ஒரு வியப்பும் ஜநிக்கும். இப்பொழுது இங்க்லிஷ் பாஷையின் அப்யாஸத்தால் நாம் அநுபவித்துவரும் ஸகல நன்மைகளும், அப்பொழுது பல மடங்கு அதிகமாக நம்மால் அநுபவிக்கப்படுமே தவிர, எவ்விதத்திலும் குன்றாது. தேஶாந்தரீயரின் பரிசயம் நமக்கு அபேக்ஷிதமே! தேஶாந்தரீயர்களுடைய ஶாஸ்த்ரத்தின் ஜ்ஞாநமும் நமக்கு வேண்டுவது தான்; ஜகத்துக்கு உதாஸீநர்களாக, நமது தேஶத்து ஜ்ஞாநத்தையும் வ்யவஹாரங்களையும் மாத்திரங்கொண்டு நாம் த்ருப்தர்களாக இருந்தால் போதுமென்பது நமது அபிப்ராயமன்று. அப்படி வர்த்திப்பதன் தோஷங்களை நாம் உணர்ந்தவர்களே! நாம் ஆஸ்

ஸதைப்படும் வ்யவஸ்தையில் இந்த நன்மைகளெல்லாம் இப்பொழுது இருப்பதை விடப் பலமடங்கு மேற்பட்டனவாக இருக்குமென்பது நமது நிச்சயமான அபிப்ராயமானபடியால் தான் நாம் இவ்வாறு விஜ்ஞாபநம் செய்துகொள்ளத் துணிந்தோம். வித்வத் ஸதஸ்ஸும், வித்வத் ஸம்மாநமும், பாஷா பாடசாலைகளும், சிரோமணி பரீக்ஷைகளும், மஹாமஹோபாத்யாய பட்டங்களும் இன்னும் இவைபோன்ற மற்றை ப்ரோத்ஸாஹநங்களும் ஓரிடத்தில் வளருகையில், மற்றும் பலவிடங்களில், நமது தேசத்தின் ச்ரேயஸ்ஸைத் தேடும் அபிமாநிகளெல்லாரும், பத்ரிகாத்வாரவோ ப்ரஸங்கங்கள் வழியாகவோ, ராஜாங்கத்து ஆலோசனை ஸபையின் மூலமாகவோ, இன்னும் வேறுவித ப்ரவ்ருத்திகளினுலோ, ஸர்வ தேசங்களிலும் ஸர்வ காலங்களிலும் ஸர்வருக்கும் எட்டும்படி, இவ்விடத்தில் ப்ரஸ்தாவித்திருக்கும் வ்யவஸ்தை போன்ற வ்யவஸ்தைகளைப்பற்றிப் பேசி, அவைகளைக் கைக்கொள்ள முயலவேண்டுமென்பதுதான் நம்முடைய ஹார்த்தமான ப்ரார்த்தனை. 'இந்தியா தேசத்து ஜநங்கள்' என்னும் சிந்ஹம் நம்மைவிட்டு அழியக்கூடாது என்னும் எண்ணம் நமக்கு உண்டானுல், இது ஒன்றே நம்மை ஸம்ரக்ஷித்துக்கொள்ளும் வழி. நமது பண்டிதர்களின் கௌரவமும் நமது மாநமும் அப்பொழுதுதான் நிலைத்து நிற்கும்.

எஸ். வாஸுதேவன்.

# பதிவ்ரதா மாஹாத்ம்யம்.

## (மார்க்கண்டேய புராணம் 16-வது அத்யாயம்.)

ப்ரயாகையில் கௌசிகனெனும் ஒரு ப்ராஹ்மணன் இருந்தான். அந்யஜந்மங்களில் செய்த பாபங்களின் பொருட்டுக் குஷ்டரோகத்தால் அவன் பீடிக்கப்பட்டான். அவ்வண்ணம் வ்யாதியால் வருந்தின அந்தப் புருஷனை அவன் பார்யையானவள் தேவனைப்போல் பூஜித்துவந்தனள். கால்களுடைய அப்யங்கநத்தாலும், உடலைப் பிடிப்பதாலும், ஸ்நாநம் செய்வித்தும், வஸ்த்ரம் உடுத்தியும், போஜநம் அளித்தும், கோழை, மூத்ரம், மலம், கெட்ட ரக்தம் இவற்றின் விஸர்ஜநங்களைச் செய்வித்தும், பின் சுத்தி செய்வித்தும், ஏகாந்தத்தில் உபசாரம் செய்தும், ப்ரியமாக ஸம்பாஷித்தும் அவள் பதியை அர்ச்சித்து வந்தாள். மிகவும் விநீதையான அவளால் இடைவிடாமல் அவ்வண்ணம் பூஜிக்கப்பட்டபோதிலும், அந்த ப்ராஹ்மணன் மிகவும் தீவ்ரமான கோபத்துடன் அவளை க்ரூரமாய்த் திட்டி விரட்டுவன். அப்படியிருந்தும், அந்தப் பத்நீயானவள் வணக்கத்துடன் கூடினவளாய், அவனைத் தெய்வமாக நினைத்தாள். துர்க்கந்தமான வ்யாதியால் பார்க்கக் கூடாதவனும், க்ரூர வார்த்தைகள் சொல்பவனுமான தன் புருஷனை அவள் ஸர்வஶ்ரேஷ்டனாக எண்ணினாள். அந்த ப்ராஹ்மணன் ஸஞ்சரிக்க யோக்யதை யற்றிருந்தும், ஒரு நாள் பார்யையைப் பார்த்துச் சொன்னான்:—"ராஜமார்க்கத்தில் ஸ்வக்ரஹத்தில் நின்ற ஒரு வேஶியானவள் என்னால் பார்க்கப்பட்டாள். அவள் வீட்டுக்கு என்னைக் கொண்டுபோ. தர்மமறிந்தவளே! எனக்கு அவளை ஸம்பாதித்துக் கொடு. அவள்தான் என் ஹ்ருதயத்தில் நிற்கின்றாள். அந்தவாலை ஸூர்யோதயத்தில் எனக்குக் கண்பட்டனள். இதோ ராத்ரி வந்துவிட்டது. அவளைப் பார்த்தபிறகு அவள் எனது ஹ்ருதயத்தை விட்டு விலகவில்லை. அழகான ஸர்வாங்கங்களையுடையவளும், பருத்த இடையும் மார்பும் பொருந்தினவளும், மெல்லிய சரீரமுள்ளவளுமான அந்த வேஶி என்னை ஆலிங்கநம் செய்யாமல்

போனால், என்னைப் பிணமாகப் பார்க்கப்போகின்றாய். மநுஷ்யர்க்குள் காமம் கெட்டது. அவளோ பகுபெயரால் ப்ரார்த்திக்கப்படுகின்றாள். எனக்குச் சக்தியின்மையால், அவ்விடம் போவதற்கு வழியில் மிகுந்த கூட்டம் தடுக்குமென்று யோசிக்கிறேன்."

காமத்தால் வருந்தும் தன் பர்த்தாவினுடைய இந்த ரூபமான வசநங்களைக் கேட்டு, ஸத்குலத்தில் பிறந்தவளும், மஹாகுணவதியும், பதிவ்ரதையுமான அந்தப் பத்நீயானவள், புடவையை இழுத்துக்கட்டிக்கொண்டு, மிகுந்த த்ரவ்யத்தையும் எடுத்துக்கொண்டு, பர்த்தாவைத் தோளில் தூக்கிக்கொண்டு மெதுவாகப் புறப்பட்டுப் போயினள். அப்போது இரவில் ஆகாசம் மேகங்களால் சூழப்பட்டுச் சலிக்கின்ற மின்னல்களால் ராஜமார்க்கம் அல்பமாகக் காட்டப்படுகையில், அந்த த்விஜாங்கனையானவள் பர்த்தாவுக்கு ப்ரியத்தைச் செய்ய இச்சித்தவளாய்க்கொண்டு நடந்தாள். அப்போது வழியில் திருடன் என பரங்கிக்கப்பட்டுச் சூலத்தின்மீது ஏற்றப்பட்ட திருடனல்லாதவரும், மிகவும் துக்கத்தால் பீடிக்கப்பட்டவருமான மாண்டவ்யரை, பத்நீயின் தோளில் ஏறிகின்ற கௌசிகனெனும் அந்த ப்ராஹ்மணன் அந்தகாரத்தில் சலிப்பித்தார். *

* மாண்டவ்யர் மஹா தபஸ்வீ. திருடின பொருள்களுடன் திருடர்கள் அவருடைய ஆஶ்ரமத்தின் ஸமீபத்தில் வரவும், ராஜஸேவகர் அவர்களைத் தேடிக்கொண்டு அவ்விடம் வந்தார்கள். திருடர்கள் ஆஶ்ரமத்தில் மறைந்தனர். ராஜஸேவகர், திருடர் சென்ற வழியைப்பற்றி ருஷியைக் கேட்கவும், ருஷி மௌனமாயிருந்துவிட்டார். பின்னால் திருடரும் பொருளும் ஆஶ்ரமத்தில் சிக்கவே, ஸேவகர் ருஷியைத் திருடனென ஶங்கித்துத் திருடர்களுடன் அவரையும் ராஜனிடம் கொண்டுபோனார்கள். ராஜா யாவரையும் சூலங்கள்மீது ஏற்றிக் கொல்ல ஆஜ்ஞாபித்தான். தபோமஹிமையால் ருஷி ப்ராணனை விடாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தனர். ராஜாவும் அவர் மஹிமையை அறிந்து அபராதக்ஷாபணம் செய்துகொண்டான். சூலத்தை வெட்டியெடுக்கவும் முளை அவர் சரீரத்தில் நிலைத்து நின்றது. அவ்வண்ணமே ருஷியிருந்துவிட்டனர். பிறகு, தர்மராஜனைத் தான் எந்தப் பாபம் செய்து அந்தக் கஷ்டம் உண்டானது என்று கேட்டார். தர்மராஜன், அவர் பால்யத்தில் பக்ஷிகளின் புச்சங்களில் புற்களின் முளைகளை ஏறிட்டபடியால், அக்கஷ்டம் அவர்க்கு உண்டானதென்றான். ருஷி யமனைக் கோபித்துப் பால்யத்தில் புரிந்தது பாபமன்று எனவும், அல்பமான பாபத்துக்குத் தண்டனை மிகப் பெரிதென்றும் சொல்லி, யமனை சூத்ரயோநியில் பிறக்கும்படி ஶபித்தார். பிறகு யமனுடைய அம்சத்தால் விதுரர் பிறந்தார். இது மஹாபாரதம் ஆதிபர்வம், 109 - வது அத்யாயத்தில் காணலாம்.

காலினால் தாக்கப்பட்டுக் கோபமடைந்த மாண்டவ்யர் அந்த ப்ராஹ்மணனைக் குறித்துச் சொன்னார் :—"இவ்விதமாக மிகவும் துக்கத்தை அடைவிக்கப்பட்டுக் கஷ்ட தசையை யடைந்த நான் எவனுடைய கால்களால் அசைக்கப்பட்டேனோ, அந்தப் பாபிஷ்டனான நராதமன் ஸம்சயமின்றி ஸூர்யன் உதித்தவுடன் அவசியம் ப்ராணன்களால் விடப்படப்போகின்றான். ஸூர்யனைப் பார்த்த மாத்ரத்தில் அவன் விநாசத்தை அடையப்போகின்றான்." இப்படி மஹா பயங்கரமான அந்த சாபத்தை அந்த ப்ராஹ்மணனுடைய பார்யையானவள் கேட்டு, மிகவும் வருந்தி, "ஸூர்யன் உதயத்தையே அடையப்போவதில்லை" என்று சொன்னாள். அதன் பிறகு ஸூர்யோதயமின்றி ராத்ரியானது விடாமல் அநேக தினங்களுடைய ப்ரமாணமாக வளர்ந்தது. அதனால் தேவர்கள் பயத்தை அடைந்தனர்.

"ஸ்வாத்யாய வஷட்காரமற்றும், ஸ்வதாஸ்வாஹாவர்ஜிதமாயும், இந்த ஸர்வஜகத்தும் நாசத்தை எவ்வண்ணம் அடையாமல் போகும்? அஹோராத்ரி எனும் வ்யவஸ்தையின்றி மாஸம் ருது முதலானவை க்ஷயிக்கும். பிறகு தக்ஷிணாயந உத்தராயணங்கள் அறியப்படமாட்டா. அயநங்களின் ஜ்ஞாநமின்றி ஸம்வத்ஸரமெனும் காலம் எப்படி உண்டாகும்? ஸம்வத்ஸரமின்றி மற்ற காலபரிமாணங்களின் ஜ்ஞாநம் ப்ரவர்த்திக்கமாட்டாது. பதிவ்ரதையின் வாக்கால் திவாகரன் உதிக்கின்றானில்லை. ஸூர்யோதயமின்றி ஸ்நாந தாநாதி க்ரியைகள் இல்லை; அக்நி கார்யங்களும் இல்லை; யாகங்களின் இன்மையும் தெரிகின்றது. ஹோமமின்றி நமக்கு த்ருப்தியும் உண்டாகப்போகின்றதில்லை. நம்மை யதோசிதமான யஜ்ஞ பாகங்களால் மநுஷ்யர் திருப்திசெய்வதால், நாமும், தாந்யங்கள் விளைவதற்கு அநுகூலமான வ்ருஷ்டிகளைக் கொடுத்து அவர்களை அநுக்ரஹிக்கின்றோம். ஓஷதிகள் உண்டானால்தான் மநுஷ்யர் யஜ்ஞங்களால் நம்மைப் பூஜிக்கின்றனர். யஜ்ஞங்களால் பூஜிக்கப்பட்ட நாம் அவர்களுக்குக் காமங்களை அளிக்கின்றோம். நாம் கீழே ஜலத்தை வர்ஷிக்கின்றோம். மர்த்யர் மேலாக ஹவிஸ்ஸை வர்ஷிக்கின்றார்கள். நித்ய கர்மங்களையும் நைமித்திக கர்மங்களையும் அநுஷ்டித்து யஜ்ஞ பாகங்களை நமக்கு ஸமர்ப்பிக்காமல், துராசையுடன் கூடின எந்த துராத்மாக்கள், ஸ்வயம் அந்நாதிகளைப் புஜிக்கின்றனரோ, அப்படிப்பட்ட அப

காரிகளான பாபிகளின் நாசத்தின் பொருட்டு நாம், ஜலம், வெயில், அக்நி, காற்று, பூமி முதலானவற்றைக்கொண்டு கேடு செய்விக்கின்றோம். அந்தத் துஷ்கர்மகாரிகளுக்கு, அதிவ்ருஷ்டி அநாவ்ருஷ்டி முதலானவற்றை அநுபவிப்பதால், மரணத்தில் முடிகின்ற வ்யாதிகள், துர்பிக்ஷம், முதலான மஹா பயங்கரமான தீங்குகள் உண்டாகின்றன. யாதொருவர் எங்கட்கு த்ருப்தி செய்து சிஷ்டாங்கத்தைப் புஜிக்கின்றனரோ, அந்த மஹாத்மாக்களுக்கு நாங்கள் புண்யலோகங்களைக் கொடுக்கின்றோம். ஸூர்யோதயங்கள் அநுஸ்யூதமாக ப்ரவர்த்திக்காவிட்டால், அவர்களுக்கு மேற்சொன்னவை யாவும் ஸம்பவிக்கமாட்டா. ஆகையால் திநங்கள் எவ்வண்ணம் உண்டாகும்?" என்றிவ்விதமாகத் தேவர்கள் ஒருவர்க்கொருவர் சொல்லிக்கொண்டார்கள். யஜ்ஞங்கள் அற்றுப்போகும் என்று சங்கையி லாழ்ந்துகூடிய அந்தத் தேவர்களுடைவாக்யங்களைக் கேட்டு ப்ரஜாபதி யெனும் ப்ரஹ்மா சொன்னார்:—
"அமரர்களே! தேஜஸ்ஸானது பரமதேஜஸால் சாந்தியடையும். அப்படியே தபஸ்ஸானது தபஸ்ஸால் சாந்தியடையும். ஆதலால் என் வசநத்தைக் கேளுங்கள். பதிவ்ரதையின் மாஹாத்ம்யத்தால் ஸூர்யன் உதிக்கின்றானில்லை. அவன் உதிக்காதபடியால் மநுஷ்யர்க்கும், அப்படியே உங்களுக்கும் ஹாநி உண்டாகின்றது. ஆதலால் பாநுவின் உதயத்தை அபேக்ஷித்தவர்களாய்த் தபஸ்ஸால் சிறந்தவளும், பதிவ்ரதையுமான அநஸூயை எனும் அத்ரியினுடைய பத்நீயை ப்ரார்த்திப்பீர்கள்" என்றிவ்வண்ணம் சொன்ன ப்ரஜாபதி வசநத்தைத் தேவர்கள் கேட்டு அநஸூயையினிடம் சென்று அவளை வேண்டினார்கள். அவளும் "உங்களுடைய இஷ்டத்தைக்கேட்பீர்கள்" என்றனள். தேவர்களும், "முன் போல திநம் உண்டாகட்டும்" என்று யாசித்தார்கள். அவளும், "பதிவ்ரதையின் மாஹாத்ம்யம் எவ்வண்ணம் குறையும்? ஆதலால், தேவர்களே! அந்தப் புண்யவதியைப் பூஜித்து எவ்வண்ணம் அஹோராத்ரிகளின் வ்யவஸ்தை மறுபடியும் ஏற்படுமோ, எவ்வண்ணம் அப்பதிவ்ரதையினுடைய புருஷன் நாசத்தை அடையமாட்டானோ அவ்வண்ணமாக நான் நாள்களை யுண்டாக்குகின்றேன்." இப்படித் தேவர்களுக்குச் சொல்லிவிட்டு அந்த சுத்த சரித்ரத்துடன் கூடிய அநஸூயையானவள் அந்தப் பதிவ்ரதையின் க்ரஹத்துக்குச் சென்றாள்; அவளைப்பற்றியும் அவள் பர்த்தாவைப்பற்றியும்

குஶலப்ரஶ்நம் கேட்டுவிட்டுத் தர்மம் சொல்ல ஆரம்பித்தனள்:—
“கல்யாணி! உன் பர்த்தாவின் முகதர்சநத்தினால் ஸந்தோஷிக்
கின்றனையா? எல்லாத் தேவர்களைக்காட்டிலும் பர்த்தாவை அதிக
மாக எண்ணுகின்றையா? பர்த்தாவின் ஶுஶ்ரூஷணை யொன்றி
னாலேயே என்னால் மஹாப்ரயோஜநம் ஸம்பாதிக்கப்பட்டது.
ஸர்வகாமரூபமான பலத்தை நான் அடைந்தமையால் இடைஞ்
சல்களெல்லாம் நிவர்த்திக்கப்பட்டன. மநுஷ்யர்களால் எப்போ
தும் ஐந்து கடன்கள் கொடுக்கப்படவேண்டும். அவ்வவனுடைய
வர்ணாஶ்ரம தர்மத்தை அநுஸரித்து ஒவ்வொருவனாலும் பொ
ருள் சேகரிக்கப்படவேண்டும் சேகரித்த பொருள் ஶாஸ்த்ரமிட்ட
கட்டளையின்படிப் பாத்ரமறிந்து விநியோகிக்கப்பட வேண்டும்.
மநுஷ்யன், ஸத்யம், ருஜுபாவம், தபஸ், தாநம் முதலான குணங்
களுடன் கூடினவனாயும், எப்போதும் ஸர்வப்ராணிகளிடமும்
தயையுள்ளவனாயும் இருக்கவேண்டும். இன்னும், ஒவ்வொரு
நாளும், சக்தியுள்ளவரையில் ஶ்ரத்தையுள்ளவனாக ஶாஸ்த்ரசோதி
தங்களான கர்மங்களை இச்சாத்வேஷாதிகளற்றுச் செய்யக்கட
வன். புண்யமுள்ளவளே! மநுஷ்யன் தன்னுடைய ஜந்மத்துக்கு
அநுகுணமாகச் சொல்லப்பட்ட ப்ராஜாபத்யம் முதலான லோக
ங்களை மஹாக்லேஶத்தால் க்ரமப்படி அடைகின்றான். ஸ்த்ரீகளோ
வென்றால், பதிஶுஶ்ரூஷை யொன்றினாலேயே, மநுஷ்யர்கள் கஷ்
டப்பட்டு ஸம்பாதிக்கும் ஸமஸ்த புண்யங்களிலும் பாதி பாக
த்தை அபஹரிக்கின்றனர். அவர்களுக்குத் தனியாக யஜ்ஞமில்லை.
ஶ்ராத்தமில்லை, உபவாஸமுமில்லை. ஏனென்றால், இப்படிப்பட்ட
புண்யகர்மங்களால் ஸம்பாதிதங்களான அந்த ப்ரியமான லோக
ங்களைப் பர்த்தாவின் பணிவிடை யொன்றினாலேயே அவர்கள்
அடைகின்றார்கள். ஆதலால், பதிவ்ரதையே! மஹாபாக்யமுள்
ளவளே! பதியினுடைய கைங்கர்யத்தின் பொருட்டு, உன்னால்
எப்போதும் சிந்திக்கப்படவேண்டும். ஏனென்றால் ஸ்த்ரீகட்குப்
பர்த்தாதான் பரமமான கதியாகின்றான். எந்த ஸத்கர்மங்களால்
பர்த்தாவானவன், தேவர்கள், பித்ருக்கள், அதிதிகள் இவர்களை
உத்தேசித்துப் பூஜை செய்கின்றானோ, அக்கர்ம பலன்களில் பாதி
யைப் பர்த்தாவினிடம் கேவலம் அநந்ய பக்தியுடைய ஸ்த்ரீயா
னவள் பதிஶுஶ்ரூஷை யொன்றினாலேயே அநுபவிக்கின்றனள்.”

என்றிவ்வண்ணம் அந்த அத்ரிபத்நீயான அநஸூயை மொ
ழிந்த வசநங்களை அப்பதிவ்ரதையானவள் கேட்டு அவளை ஆத

ரத்துடன் பூஜித்துப் பின்வருகிறபடி ப்ரதிவசந மளித்தனள். "நான் தந்யையானேன்; அநுக்ரஹிக்கப்பட்டவளானேன்; தேவர்களால் கடாக்ஷிக்கப்பட்டவளானேன். ஏனென்றால் ஓ ஸ்வபாவஸித்தமான மங்களத்துடன் கூடினவரே! என்னுடைய ப்ரதைத்தையை நீர் இன்னும் வ்ருத்தி செய்கின்றீரன்றோ? ஸ்த்ரீகட்குப் பதிக்கு ஸமாநமான ப்ராப்யம் வேறொன்றில்லை யென்பதை நான் அறிவேன். பதியினிடம் பக்தியானது இந்த லோகத்திலும் லோகாந்தரத்திலும் ஸ்த்ரீகளுக்கு உபகாரமாகின்றது. ஓ கீர்த்தி பொருந்தினவரே! பதியின் ப்ரஸாதத்தால் இவ்வுலகிலும், மரணாநந்தரமும் ஸ்த்ரீயானவள் ஸுகத்தை அடைகின்றாள். ஏனென்றால், பெண்பாலர்க்குப் பர்த்தாதான் தேவதை. மஹாபாக்யவதீ! ரூபத்துடன் கூடினவரே! என் க்ருஹத்துக்கு வந்த உம் பொருட்டு, என்னாலாவது, என் பர்த்தாவினாலாவது செய்யத்தக்கதைச் சொல்லும்."

இவ்வார்த்தைகளைக் கேட்டு அநஸூயையானவள், "இந்த தேவர்கள் இந்த்ரனுடன் கூடினவர்களாய், உன் வாக்யத்தால், ஸத்கர்மாநுஷ்டாந நிமித்தம் ஏற்பட்ட இராப்பகல் என்கிற வ்யவஸ்தை அற்றுப்போனதைப் பார்த்துத் துக்கித்தவர்களாய், என்னிடம் வந்து, முன்போல் இடைவிடாமல் நடக்கவேண்டிய அஹோராத்ரியின் நிலைமையை யாசிக்கின்றனர். நான் அதற்காக உன்னிடம் வந்தேன். இந்த என் வார்த்தைகளைக் கேள். திநம் என்பது அபாவத்தை அடைந்ததால் யாகாதி ஸமஸ்த கர்மங்களும் அபாவத்தை அடைந்தன. ஓ தபஸ்விநி! அக்கர்மங்களின் அபாவத்தால் தேவர்கள் புஷ்டியை அடைகின்றாரில்லை. நாள்களின் நாசத்தால் மநுஷ்யர்க்குள் ஸர்வ வ்யாபாரங்களும் நின்றுபோயின. அதனால், அநாவ்ருஷ்டியுண்டாகி ஜகத்தே நாசத்தை அடைகின்றது. ஆனபடியால் இந்த ஆபத்தினின்று ஜகத்தை உத்தரிக்க நீ இச்சிக்கின்றாயாகில், ஓ பதிவ்ரதா ஶிரோமணியே! தயவுபண்ணு; முன்போல் ஸூர்யன் லோகத்துக்கு உதிக்கட்டும்" என்று சொன்னாள்.

இதைக் கேட்டு அந்த ப்ராஹ்மண ஸ்த்ரீயானவள், "ஓ மஹாபாக்யத்துடன் கூடினவரே! மிகுந்த கோபிஷ்டரான மாண்டவ்யரால் எனக்கு ஈஶ்வரனான பர்த்தாவானவர், 'ஸூர்யோதயத்

தில் நீ நாசத்தை அடையப்போகின்றாய்' என்று சபிக்கப்பட்டார்" என்று சொன்னாள். அதைக் கேட்டு, அநஸூயை "நீ இவ்வண்ணம் சொல்கின்றபடியால், ஓ மங்களமுள்ளவளே! உனக்கு இஷ்டமுள்ள பக்ஷத்தில், நான் உன் பர்த்தாவின் சரீரத்தை முன்போல் செய்கின்றேன்; உனக்கு நூதநமாகப் பர்த்தாவைச் செய்கின்றேன். ச்ரேஷ்டமான வர்ணமுடையவளே! பதிவ்ரதைகளான ஸ்த்ரீகளுடைய மஹிமையானது ஸர்வப்ரகாரத்தாலும் என்னால் பூஜிக்கத்தக்கதன்றோ? ஆதலால் உன்னைக் கௌரவப்படுத்துகின்றேன்" என்று சொன்னாள்.

பதிவ்ரதை அப்படியே ஆகட்டுமென்று சொல்ல, தபஸ்விநியான அநஸூயையானவள் அர்க்ய ஜலத்தைத் தூக்கி ஸமர்ப்பித்து, ஸூர்யனை ஆஹ்வாநம் செய்தனள். அப்போது ராத்ரியானது பத்து ராத்ரியளவு கடந்தது. உடனே ஸூர்ய பகவான் விகஸித்த பத்மம்போன்ற அருணாகாரத்துடன்கூடிய மஹாமண்டலத்துடன் உதயகிரியின்மீது ஏறிநின்றார். உத்தரக்ஷணமே பதிவ்ரதையினுடைய பர்த்தாவும் ப்ராணனால் விடப்பட்டுப் பூமியின்மீது விழுந்தனர். அப்படி விழுந்தவரை அவருடைய பத்நீ பிடித்துக்கொண்டாள்.

உடனே அநஸூயையும் "மங்களமுள்ளவளே! நீ வ்யஸநப்படாதே. பதி கைங்கர்யத்தால் ஸம்பாதிதமான என்னுடைய சக்தியைப் பார். விளம்பிப்பதால் உனக்கென்ன குணம்?" என்று சொல்லிவிட்டு, "ரூபத்தாலும், சீலத்தாலும், புத்தியாலும், மதுரமான வசநங்கள் முதலான பூஷணங்களாலும், என் பர்த்தாவுக்கு ஸமமாக வேறு புருஷனை நான் எங்கும் கண்டதில்லை என்பது ஸத்யமாகில், அந்த ஸத்யத்தால் இந்த ப்ராஹ்மணனானவன் வ்யாதி நீங்கி, மறுபடி யௌவநத்தை யடைந்து, ஒரு நூற்றாண்டளவும் தன் பத்நீக்கு ஸஹாயனயிருக்கும்படிப் பிழைத்தெழக்கடவன்; என் பர்த்தாவுக்கு ஸமமான வேறு தெய்வத்தை நான் காண்கின்றேனில்லை யென்பது ஸத்யமாகில், அந்த ஸத்யத்தால் இந்த விப்ரன் ரோகம் நீங்கிப் பிழைக்கட்டும்; மனோவாக்குக்காயங்களினால் என் பர்த்தாவின் ஆராதநத்தின்பொருட்டு நான் என்றும் யத்நபரையாக இருந்தது ஸத்யமாகில், அதனால் இந்த த்விஜன் ஜீவிக்கட்டும்" என்று ப்ரதிஜ்ஞை செய்

தாள். உடனே, வ்யாதி நீங்கி, யௌவநமடைந்து, அந்த விப்ரன் எழுந்தான். மூப்பற்ற ஓர் தேவனெனத் தனது காந்தியால் அந்த வீட்டை ப்ரகாஶிப்பித்தான். உடனே புஷ்பவர்ஷம் பெய்தது; தேவர்களுடைய வாத்யங்கள் முழங்கின. தேவர்கள் களிப்பை யடைந்தனர். "ஓ கல்யாணி! உனக்கு வேண்டிய வரம் கேள். தேவர்களுடைய மஹாகார்யம் உன்னால் ஸாதிக்கப்பட்டது. ஆதலால், ஓ தபஸ்விநி! தேவர்கள் உன் முன் வரப்ரதர்களாய் நிற்கின்றார்கள்" என்று அநஸூயையைப் பார்த்துத் தேவர்கள் சொன்னார்கள்.

அநஸூயை அதைக் கேட்டு, "பிதாமஹன் முதலான தேவர்கள் என்னிடம் க்ருபையுள்ளவராயும், எனக்கு வரந்தருபவர்களாயும் இருக்கும் பக்ஷத்தில், நானும் வரங்களைப் பெற யோக்யையா யிருக்கின்றேனென உங்களால் நிஶ்சயிக்கப்பட்ட பக்ஷத்தில், ப்ரஹ்மா, விஷ்ணு, சிவன் இவர் மூவரும் எனக்குப் புத்ரர்களாய்ப் பிறக்கட்டும். என் பர்த்தாவுடன்கூட, ஸர்வதுக்க நிவாரணார்த்தமாக யோகத்தை அடைகின்றேன்" என்று கூறினாள்.

ப்ரஹ்மா, விஷ்ணு, சிவன் முதலான தேவர்கள் 'அப்படியே ஆகட்டும்' என்று அவளுடன் சொல்லிவிட்டு, அவளை ந்யாய ப்ரகாரம் பஹுமாநித்துச் சென்றனர்.

[குறிப்பு.—த்ரிமூர்த்திகளின் அம்ச பூதர்களான சந்த்ரன், தத்தாத்ரேயர், துர்வாஸர், இவர்கள் அநஸூயைக்குப் புத்ரர்களாய்ப் பிறந்தனர். விஷ்ணுவின் அம்சபூதரான தத்தாத்ரேயர் மாஹாத்ம்யம், புராணத்தில் விஸ்தாரமாகச் சொல்லப்படுகின்றது.]

பத்ராதிபர்.

ஸ்ரீ:

# ஜநகநந்திநீ.

இப்போது நம்முடைய கதாஸ்தாநம் மாறுகின்றது. நிரந்தரம் அநுபவிப்பதால், போதுமெனச் சித்தத்திற்கு த்ருப்தியைத் தராத திவ்யாம்ருதம் போன்று, க்ஷீராப்தி நிகேதநன் நித்யவாஸம் செய்வதற்கு உகந்தருளிய திருக்குடந்தையைச் சிந்திப்போம். தெளிந்த நீர் பெருகும் பொன்னியெனும் நங்கையானவள், பகவான் சயநித்த ஸ்தாநமெல்லாம் க்ஷீராப்தியெனக் கீர்த்திகொள்ள வேண்டுமென்று இச்சை கொண்டவளாய்த் தானே இருபுறமும் வளைந்தோடின குடந்தையில் மால்வண்ணன் கிடந்தவாறு யார்க்குத் தெரியும்? அதை அவன்தான் சொல்லப் பொருந்தும். ஆதலின் பக்திஸாரன் ப்ரார்த்தித்துக் கேட்கவும், அவன் மறுமொழி அளித்திலன். திருவயோத்தியைத் துறந்து இலங்கைமாநகர் வரையில் நடந்த கால்கள் நொந்தவோவென ஆழ்வார் வினவ, அஃது அங்ஙனம் இல்லாதபடியால் விடையளித்திலன். ஏனமாய் ஞாலம் இடந்தபடியால் மெய் குலுங்கிப் படுத்தையோவென ஆழ்வார் வினவ, அதற்கும் விடையளித்திலன். ஏனென்றால், ஸகல ஜகந்நிர்மாண சதுரனுக்கு நோவேது? குலுக்கமேது? அவன் யோகநித்ராவசனெனக் கிடக்கவேதான், அடியார் அவனை அநுபவிக்க அநுபவிக்க அபர்யாப்த்ததையே மிகுதியாய் நின்றது. இப்படிப் பக்தர் பெருகி அநுபவிக்கப்பெற்ற ஸ்தலவிசேஷத்தில் பக்திஸாரன் ரமித்தனர்.

இத்தகைய அபர்யாப்தாம்ருதம் இன்னும் திருக்குடந்தையில் நிற்கும்போது, மர்த்யமாய் நிற்கும் சரீரங்களின்மேல், வஸ்துவொன்றை நினைக்காத பேர்கள், இப்போது, மர்த்யோப போக்யமான விஷயங்களில் தம் மநஸ்ஸுக்களை ஸதா ப்ரவர்த்திப்பித்துக் கொண்டு காலம் கழிக்கின்றார்கள். பரமபுருஷார்த்தப்ரதன் பள்ளிகொண்டவிடத்தில் அநர்த்த ஹேதுவான கேவலம் அர்த்த சிந்த

னையில் ஆழ்ந்தவர் அவனை மறந்து திரிகின்றனர். அவர்க்காக இக் காலம் காப்பி ஹோட்டல்களும் நாடகசாலைகளும் கணக்கற்றுப் பெருகி வளர்கின்றன. ஆதாயம் செலவென அநவரதம் சொல்லிக் கொண்டிருப்பார்க்கு ஆதாயம் ஓர் புறமும் செலவு மற்றோர் புறமும் கும்பகோணத்தில் அமைந்து நிற்கின்றன. அனைவரும் அந் நகரத்தின் ஈஶாந்ய பாகத்தில் கட்டியுயர்ந்த கட்டிடங்களில் காலங் கழித்துக் களிக்கின்றனர். அதனால் ஸர்க்காருக்கு லாபம்; வக்கீல்களுக்கு லாபம்; ஸாக்ஷி சொல்வோர்க்கு லாபம்; லாயர் குமாஸ்தாக்கட்டு லாபம்; வ்யவஹாரப் பயிர் வளர்ப்போர்க்கு லாபம். ஜயித்த கக்ஷிக்காரன் ஜபம் மிகுதிபட வீட்டிற்குப் போகின்றான். தோற்றவனோ தொலைந்து போகின்றான். இந்நகரத்தில் இப்போது ஈஶ்வரன் நிற்கின்றானென்பது ஸந்தேஹிக்க வேண்டியிருக்கின்றது. விக்ரஹ ரூபத்தைவிட்டு விபவ ரூபத்துடன் அவன் வந்தானாகிலும் அவனைக் கணிசிப்பவர் அங்கே ஏற்படுவது துர்லபம்.

ஜநகநந்தினி தனக்குக் கிடைக்கமாட்டாளெனும் உண்மையறிந்தபின் ஸ்ரீநிவாஸன் க்ச்நகரை விட்டொழிந்தானென்று முன்பே சொன்னோம். ‘கிட்டாதாயின் வெட்டென மற’ எனும் வசநம் அவனுக்குப் பயன்படவில்லை. நாடகங்களைப் படித்து, கண்ட மாத்திரத்தில் கருத்தைக் கவர்கின்ற கண்மணிகளைப்பற்றி அவன் எண்ணத் தொடங்கினான். ‘வக்ஷாஜேநா நே வ்யஸஹம் ஶ்ரீ ராக்ஷ க்ஷுந்’ என்று காளிதாஸன் வர்ணித்தபடிகளை யோசித்துத் தனக்கும் வேண்டுமோர் ஹ்ருதய நாயகியைப்பற்றிச் சிந்தித்தவன், பார்த்தவுடன் பற்றளிக்கும் புதுப்பெண்களை நினைத்தானில்லை. சிரகால பரிசயத்தால் ஜநகம் அவன் மநஸ்ஸில் குடி கொண்டாள். ரூபாதிஶயத்தால் அவள் அவன் மநஸ்ஸில் மற்றொரு பெண்ணினுருவம் குடிகொள்ள இடம் தந்தாளில்லை; குணாதிஶயத்தால், அவன் சித்தம் அந்யத்ர சலிக்க விட்டாளில்லை. ஜ்ஞாநாதிஶயத்தால் அவளைப்பற்றித் தன்னை அடிமையெனப் பாவித்தனன். யௌவநம் கொஞ்சமும் ஆரம்பிக்காதவளவில், வயஸ்ஸில் குன்றிய ஓர் பெண்ணினிடம் அபிலாஷை உதிப்பது ஸஹஜமன்று. ஆயினும் அவன் குலத்துக்கேற்ற மரியாதையானது, இப்படிப்பட்ட பெண்களிடமே விருப்பம் உதிக்க அவகா

ஸம் தருகின்றது. அவளை மணப்பதால் பிற்காலம் உண்டாகும் ஸுகாதிகளை ஸ்ரீநிவாஸன் யோசனையால் விஸ்தாரப்படுத்தினன். ஆயினும் அவன் மனோரதமெல்லாம் மனோரதமாகத்தான் முடிவு பெற்றது.

விவேக முள்ளவர்க்கும் இவ்வித ஸந்தர்ப்பங்களில் விவேகம் பயன்படுவதில்லை. விவேகிகள் சொல்லும் ஹிதவசநங்களும் காமுகர்க்கு வீண் சொற்களாய்ப் போகின்றன. கச்சி நகரத்தைத் துறந்த பின்பு, ஸ்ரீநிவாஸன், தனக்குள்ள விவேகத்தையும் துறந்து சென்றனன். தத்காலத்திய பாஷாந்தர வித்யாப்ரகாரமானது படிக்கும் சிறுவர்க்குக் கடைச் சோற்றையும் கைகொடுத்துக் காக்கும் நண்பர்களையும் குறைவின்றி யளிக்கின்றது. ஸ்வயம் ஸம்பாத்ய ஸாமர்த்யமற்ற சிறுவர், பெற்ருேரும் உற்ருேரும் ப்ரீத்யாதிக்யத்தால் கொடுக்கும் பொருள்களைக் குன்ருமல் செலவு செய்கின்ருர்கள். இதற்கென்றும் அதற்கென்றும், இங்கிலீஷ் படித்தோர்க்கும் இன்னதென்று தெரியக்கூடாத வண்ணம், உபாத்யாயர்கள்மீது பாரத்தைப் போட்டுப் பொருள் உதவும் உறவினரிடம் பொருள் பல வாங்கும் சிறுவர்க்குத் தாம் செலவுகளில் ஆழ்வதுடன், ஸ்நேஹிதர்க்கும் செலவுக்கு உதவ வழியுண்டாயிருக்கின்றது. இத்தகைய பிள்ளைகளைப் பெற்றுப் பாரியாய்ப் போந்த பெற்றவரும் உளர். ஆதலால் ஸ்ரீநிவாஸனுக்கு ஆஹாரநிமித்தம் வருத்தம் தோன்றியிலது. உன்மத்தன்போல் அகப்பட்ட விடங்களில் உண்டி யருந்தி, நேர்ந்த விடங்களில் நித்திரை செய்து, படிப்பைவிட்டுக் காலம் போக்கினன்.

இவ்வண்ணம் பதினெட்டு மாதங்கள் கழிந்தன. அப்போதைக்கப்போது காஞ்சீபுரம் சென்று ஸ்ரீநிவாஸன் மாதாபிதாக்களைப் பார்ப்பான். அவரிடம் கொஞ்சம் பொருள் பெற்றுக்கொண்டு மீளவும் போய்விடுவான். அவர் சொல்லும் மதிகள் அவன் காதுகளுக்குள் செல்லமாட்டா. அக்காலங்களில் ஜநகநந்தினியைத் தூர நின்று சற்று நோக்குவன். அவளை நெருங்கவும் அவன் பயப்படுவன். முடிவில் ஒரு தை மாஸத்தில் அவன் காஞ்சீபுரம் வந்திருக்கையில், அவனுடைய பெற்ருேரும், அம்மானுன கேசவாசார்யரும், அவனுக்கு விசேஷமாக நல்வார்த்தைகள் சொல்லவும், அவன் அவற்றைக் கொஞ்சம் செவியுற்ருன். அவன் இஷ்

டம் விபலமாய்ப்போன ஸமீப காலத்தில் அவ்வார்த்தைகள் குணம் செய்யாமற்போனாலும், அந்த வருத்தம் காலக்ரமத்தால் சிறிது குறையவும், ஹிதவசநங்களை அவன் நின்று கேட்டனன். அவற்றின் ப்ரயோஜநம் அவ்வளவோடு முடிந்தது. அது முதல் அடுத்த வைசாகமாஸ பர்யந்தம் அவன் பிதாவின் க்ரஹத்தில் வஸித்தான்.

மீண்டும் வைசாக உத்ஸவம் வந்தது. ஜநகநந்தினி இரண்டு வேளைகளிலும் வீதியலங்காரம் செய்தனள். அவ்வவஸர மொன்றில் தற்செயலால் ஸ்ரீநிவாஸன் ஜநகநந்தினியை நெருங்க நேர்ந்தது. அவளும் முகம் திரும்பி அவனைப் பார்த்தனள். அந்தக் காட்சியை விட்டகல அவனுக்குச் சக்தியில்லை. "ஜநகம்! ஸுகமாயிருக்கின்றையோ?" என்றனன்.

"ஸ்ரீநிவாஸா! உன்னைக் காண விரும்பினேன். உனக்கு ஹிதம் சொல்ல வேண்டினேன். உனக்கு வயதாகவில்லையா! நீ படிக்கவில்லையா? உன் புத்தியை யெல்லாம் நீ காற்றில் பறக்கவிட்டையே! நீ கெடுவதுமன்றி என்னையும் வீண் வார்த்தைகளுக்கு விஷயமாக்கிவிட்டையே! எல்லோரும் என்ன வம்பளக்கின்றார்கள்? அது உனக்குத் தெரியாதா? 'ஜநகத்தை ஸ்ரீநிவாஸன் கல்யாணம் செய்துகொள்ள இச்சித்தானும். அவள் பிதா அதற்கு ஸம்மதிக்கவில்லையாம். அதனிமித்தம் அவன் ஊரையும் நாட்டையும் படிப்பையும் விட்டுப் பராரியாய்ப் போய்விட்டானும்?' என்று உன்னையும் என்னையும் சேர்த்து ஊரார் பேசும்படி பண்ணிவிட்டையே! நீ தான் ஊரையும் உறவினரையும் விட்டுவிட்டாய். ஜனங்கள் பேசுவது உனக்குத் தெரியவில்லை. நான் பெண்ணுச்சுதே! உன்னைப்போல் ஓடிப்போக எனக்கு அடுக்குமோ? எனக்கு இந்த வார்த்தைகளைக் கேட்க வெட்கமா யிருக்கின்றதே." என்று சொன்னாள் ஜநகநந்தினி.

அதைக் கேட்டு ஸ்ரீநிவாஸன், "என்னை என்ன செய்யச்சொல்கின்றனை?" என்றனன்.

"நீ மாதா பிதாக்களின் அதிகாரத்தைக் கடந்தவன். ப்ராஹ்மணர்க்குள் ஸ்வயம்வரமில்லை. காமப்ரேரித விவாஹமுமில்லை. மாதா பிதாக்கள் இருக்கையில் பிள்ளைகட்கும் பெண்கட்கும் விவாஹம் அவர்கள் அதீநம். நீ பாஷாந்தரப் பழக்கத்தால் உனக்

கேற்ற பெண்ணைப்பற்றி ஸ்வயமே யோசித்துவிட்டாய். நான் அவ்வண்ணம் யோசிக்க இடமில்லை. என் பிதாவின் இஷ்டம் தான் எனது இஷ்டம். ஆதலால் உன் இச்சை விபலமாயிற்று. உடனே அதை மறந்து, உனக்கு ஆகவேண்டிய கார்யங்களைப் பார்ப்பதை விட்டு, உன்மத்தனெனத் திரிந்துகொண்டு என்னையும் வார்த்தைகட்கு விஷயமாக்கி விட்டையே?'' என்றனள் ஜநகம்.

"இனி அவ்வண்ணம் செய்யவில்லை. நான் யாது செய்யட்டும்?'' என்றான் ஸ்ரீநிவாஸன்.

"போய்ப் பள்ளிக்கூடம் சேர். இன்னும் கற்கவேண்டிய கல்வியைக் கற்பாயாக. உனக்கு வயதும் இருபது ஆயிருக்குமன்றோ? யாதேனுமோர் பெண்ணைக் கல்யாணம் செய்துகொள்'' என்றனள் ஜநகநந்தினி.

"நீ சொன்னபடி படிக்கப் போகின்றேன். கல்யாண வார்த்தையை எடுக்காதே'' என்று சொன்னான் ஸ்ரீநிவாஸன்.

"ஸ்ரீநிவாஸா! நடுத்தெருவில் நாமிருவரும் நின்று பேசல் கூடாது. லோகரீதியை அநுஸரித்து நட. என் கிட்ட வரவேண்டாம். இதுவரையில் நாம் பேசியதைப் பலர் பார்த்திருப்பார்கள். நான் பர்த்ருமதி. உன்னையும் என்னையும் சேர ஜநங்கள் பேச இடமுண்டாயிற்று. ஆதலால் நாம் ஸமீப பந்துக்களாயிருந்தபோதிலும், ஒருவர்க்கொருவர் தூரமாகத்தான் ஸஞ்சரிக்க வேண்டும். என்னைப்பற்றின எண்ணத்தை விலக்கு. "ஸம்ஸார யாத்ராம் வ
ர்தீம் ஸர்வத்ர ஸர்வதா। ... ...
... ... எனும் கீதாவசநத்தை என் வசநமாக நினைத்துக்கொள்'' என்று சொல்லிவிட்டு ஜநகநந்தினி உள்ளே சென்றனள்.

ஸ்ரீநிவாஸனும் அவ்விடம் விட்டு மெள்ள நடந்தான். அவன் மநஸ்ஸில் யோசனைகள் பலவாறாகப் பெருகின. 'விச்வாஸத்துடன் ஒரு பார்வை, ஒரு சொல், ஒரு புன்னகை, இவற்றுள் ஒன்றும் கிடைக்காமல் போயிற்றே' என்று சிந்தித்தான். "ஆம். அவள் ஜ்ஞாநமுள்ளவள். சீலமுள்ளவள். பெரிய வம்சத்தில் பிறந்தவள். பரமைகாந்தியின் பெண். அவள் சொன்னவண்ணம் அவள் பர்த்ருமதி. நான் நினைப்பதெல்லாம் ந்யாயவிருத்தம். அவள் எனக்கு

ஹிதம்தான் சொன்னுள். பைத்யம் பிடித்தவன்போல் திரிவதில் பயனென்ன? பெற்ருரையும் வருத்துகின்றேன். இனிப் படிப்பைப்பற்றி ப்ரயத்னிக்கின்றேன்'' என்று யோசித்தான்.

அன்றிரவே பிதாவைப்பார்த்து, "அப்பா! வாசிக்கவேண்டிய வித்யையின் சேஷத்தை வாசிக்கலாமென்று நினைக்கிறேன்'' என்றனன்.

"குழந்தாய்! எனக்கு இப்போது மிகவும் ஸந்தோஷமாயிருக்கின்றது. ஏதோ நல்ல காலம் வந்ததென நினைக்கின்றேன். எப்போது பட்டணம் போகின்ருய்?'' என்றனர் வரதாசார்யர்.

"பட்டணம் போகமாட்டேன். என்னுடன் வாசித்தவரெல்லாரும் மேலே போய்விட்டார்கள். அவர்கள் காண நான் கீழ் வகுப்பில் சேர்ந்து வாசிக்கமாட்டேன்'' என்று சொன்னுன் ஸ்ரீநிவாஸன்.

"ஆனுல் என்ன யோசனை செய்கின்ருய்?'' என வினவினர் பிதா.

"கும்பகோணம் போய்ப் படிக்கின்றேன். செலவுக்குக் கொடுத்தால் போகின்றேன்'' என்ருன் ஸ்ரீநிவாஸன்.

"உன்னிஷ்டப்படி செய்'' என்றனர் பிதா.

இந்த வார்த்தைகள் நடந்தபின்பு ஆனி மாஸத்தில் கும்பகோணம் கலாசாலையில், பி. ஏ., பரீக்ஷைக்காக முதல் ஸம்வத்ஸரம் வகுப்பைப் போய் ஸ்ரீநிவாஸன் சேர்ந்தனன். ஒரு வருஷம் கழிந்த பிறகு க்ரமமாக மேல் வகுப்பிலும் சேர்க்கப்பட்டனன். அவ்வகுப்பின் படிப்பை முடித்து, பி. ஏ. பரீக்ஷைக்குப் போவதாயிருக்கும் தருணத்தில் நம்முடைய கதை திருக்குடந்தையில் ஆரம்பிக்கின்றது.

ஜநகநந்தினியின் விக்ரஹம் ஸ்ரீநிவாஸன் ஹ்ருதயத்தை விட்டு எப்போதும் அகன்றதன்று. பரதாரசிந்தனை பாபமென்பர். நீடித்து விரும்பிய பொருள் கிட்டாமற் போனுலும் அதன் ஸ்மரணை மாத்ரம் நீடித்து நிற்பது லோகத்தில் ஸஹஜம். ஸ்ரீநிவாஸனுடைய சித்தவ்ருத்தியில் பாபஸம்பந்தம் ஈஷத்தும் இல்லை. ஜநகநந்தினியின் சீலமும் குணங்களும் எத்தகைய மனிதர் மனத்திலும் அஸாதுயோசனைகளை விலக்கிவிடும். மேலும் ஸ்ரீநிவாஸன் அவளை

ஓர் தேவதையைப்போல் பாவித்தனன். ஆதலால் அவளால் தனக்கு ஒரு ப்ரயோஜநத்தையும் அபேக்ஷிக்காமல், அவளுடைய ஸௌக்யத்தையே முக்யமாகக் கருதி, அப்படிப்பட்ட ஸௌக்யம் அவளுக்கு வாராமல் போய்விடுமோ என்று பயந்தான். அவள் சொல்லாவிட்டால் அவன் படிப்பில் இறங்கியிரான். ஆதலால் அவன் படிக்கும்போதும் அவள் நினைவை விலக்கத் திறனற்று நின்றான்.

பல ஸமயங்களில், அவன் முன்கொண்டிருந்த சித்தகாலுஷ்யம் அவனைப் பாதித்துக்கொண்டிருந்தது. அப்படிப்பட்ட ஓர் ஸமயத்தில் அவன் வஸித்துக்கொண்டிருந்த கலாசாலைக் கருகில் கட்டப்பட்டிருந்த வித்யார்த்திகள் க்ரஹத்தை விட்டுச் சுற்றிலும் பரவிய தோட்டத்தில் ஸஞ்சரித்தான். ஸஞ்சரித்துக்கொண்டே நீரற்றுச் சென்ற காவிரி நதிக்குள் இறங்கினான். அதன் தென்கரையில் பாதை மீதேறினான். அப்பாதை வழியே மேற்கே சென்று சங்கரமடத் தெருவே தென்புறம் நோக்கி நடந்தான். அங்கே போர்ட்டர் மண்டபத்துக்குள் சென்று, கும்பகோணம் பெரிய மனிதர்கள் பந்தாடவும், சீட்டாடவும், பேசவும், சிரிக்கவும், ஸோடாஜலம் குடிக்கவும், சிற்றுணவுகள் உண்ணவும் கண்டு, இவர்கள் சரீரம் இதற்காகத்தான் எடுத்தனரோ என்று எண்ணிக் கொண்டு, 'நீரிற் குமிழி யிளமை நிறை செல்வம், நீரிற்சுருட்டு நெடுந்திரைகள்—நீரில், எழுத்தாகும் யாக்கை நமரங்காள் என்னே, வழுத்தாத தெம்பிரான் மன்று" எனும் செய்யுளைச் சிந்தித்தான். தான் பட்டணத்தில் படிக்கையில், தானும் அவ்வண்ணமிருந்ததையும், தன் நண்பர்கள் "நாளைச் சாவோம் ஆதலால், இன்று உண்போம், குடிப்போம், விளையாடுவோம்" என்று சொல்வதையும் நினைத்தான். தனது புத்தியின் விகாரத்தை, அதற்கென்று ஒரு ப்ரயத்நமும் செய்யாது, ஜநகநந்தினி எவ்வளவு மாற்றிவிட்டா ளென்றும் யோசித்தான்.

ஆதலால் போர்ட்டர் ஹால் காட்சியில் வெறுப்படைந்து வெளியே வீதியில் வந்தான். ஆராவமுதன் கோவில் கோபுரத்தைக் கண்டான். ஸாதாரணமாக ஸ்ரீநிவாஸன் பகவானுடைய ஸந்நிதிக்குப் போவதில்லை. பகவானிடம் அவனுக்குப் பக்தி விளைந்ததெனக் கூறவும் இடமில்லை. நள்ளிரவில் கடலில் வழிதப்பி அலையும் நாவம் ஓட்டுபவனுக்கு ஓர் வெளிச்சம் கண்டால், அதை நோக்கி அவசமாய் அவன் செல்வதை யொத்துச் சாரங்கதரன்

கோபுரம் காணும் திக்கை நோக்கி நடந்தான். ஸந்நிதிக்குள்ளே சென்றான்.

அப்போது ஸூர்யன் அஸ்தமிக்கும் வேளை. த்வஜஸ்தம்பத்தினருகே ஒரு ஸந்யாஸி ஸேவிக்கவும், அவரைச் சுற்றிப் பல ஸ்ரீ வைஷ்ணவர்கள் நிற்கவும் கண்டான். அப்போது அவனுக்கு மறந்துபோன ஒரு விஷயம் ஜ்ஞாபகத்துக்கு வந்தது. அவன் பெருமாள்கோவிலில் இருக்கையில், ஜநகநந்தினியினுடைய பர்த்தா திருக்குடந்தைக் கருகாமையில் ஒரு ஸ்வாமி ஸந்நிதியில் காலக்ஷேபம் செய்வதாகக் கேள்விப்பட்டனன். அந்த ஸ்வாமி தான் கண்ட ஸந்யாஸி தானோ, அவருடைய பரிவாரத்தில் ஜநகத்தின் புருஷன் இருக்கின்றாரோ என்று ஸ்ரீநிவாஸன் யோசித்தனன்.

தத்காலம் இங்கிலீஷ் வித்யாசாலையில் கற்பவர்க்கு வேஷங்கள் விதம்விதமாக ஏற்பட்டிருக்கின்றன. கத்திரித்த தலைமயிர், முகக்ஷௌரம், பாழ்நெற்றி, நெருக்கமான சட்டை, கழுத்தில் நெக்டை, அஜகளம்போல் அங்கே தொங்கும் துணிகள், காலில் நிஜார், இடுப்பில் சர்மபந்தநம், இத்தகைய வேஷம் நாகரிகத்தில் சிறந்த தென்பார். இதற்குக் குறைந்தபடிகள் பல முடிவான படியாவது, கணைக்கால் மறையத் துணியை மடித்துக் கட்டல், உடலை மறைக்க ஓர் சட்டையோ சிறு துணியோ, தலையில் ஓர் சிறு குடுமி, நீர்த்திருமண், இவ்வளவுடன் நிற்கும். ஸ்ரீநிவாஸன் கச்சிநகரில் பிறந்தவனானதாலும், தத்காலம் கும்பகோணத்தில் வஸிப்பதாலும், ஜநகத்தை மறக்காத காரணத்தாலும், நாகரித்தில் கடைப்படியில் உடை தரித்தனன். ஆனாலும், ஒரு ஸ்ரீ வைஷ்ணவ ஸந்யாஸியையும், அவருடன் சென்ற வைதிக ஸ்ரீ வைஷ்ணவர்களையும் நெருங்க அஞ்சினன்.

இதற்குள், அந்த ஸ்வாமியும் அவருடைய அந்தேவாஸிகளும் ஸந்த்யாவந்தநாதி ஆஜ்ஞா கைங்கர்யங்களை நிறைவேற்றுவதற்காக ஹேமாப்ஜ புஷ்கரிணிக்குச் சென்றார்கள். அங்கே அவர்கள் போய்ச் சேரும்வரையில் ஸ்ரீநிவாஸனும் அவர்கள் பின் ஸந்நிதி ப்ரதக்ஷிணமாய்ச் சென்றான். அவர்கள் புஷ்கரிணியி லிறங்கவும், தானும் மற்றோர் புறமாகக் குளத்தி லிறங்கி ஸந்த்யாவந்தநம் செய்வதாகப் பாவனை செய்தான். அவர்கள் ஸந்நிதிக்குள் மீண்டும் புகவும், அவனும் அவர் பின்னால் புக்கு, ஸந்நிதி ப்ரதக்ஷிணமாய்ச் சென்றான். அவர்கள் பெருமாள் தாயார் ஸந்நிதிகளில் போய் ஸேவிக்கும் காலங்களில் தானும் தூர நின்று திவ்ய தம்பதிகளைத் தர்ஶித்தான். அவர்களைப் பின்தொடர்ந்து ஸந்நிதியை விட்டான்.

பத்ராதிபர்.

577

ஸ்ரீ:

# ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை.

## (திருப்பதிப் பிரிவு.)

இந்த் ஸபையாரின் ப்ரார்த்தனையினால் சென்னைப்பட்டணத்திலிருந்து, பகவத் விஷய வித்வான் ஸ்ரீ. உப. சேட்டலூர் நரஸிம்ஹாசார்யர் ஸ்வாமி இவ்விடம் எழுந்தருளி நம்மாழ்வார் ஸந்நிதியில் நாளது ௵ மார்ச்சுமீ 29,30,31 - தேதிகளில் பகவத் விஷயத்தைக் குறித்துப் பின் வருமாறு உபந்யஸித்தார். த்ராவிட ப்ரபந்தங்களில் அவர்க்குள்ள பாண்டித்யமும், வாக்தோரணியும், அர்த்தங்களைத் தெளிவாக உரைக்கின்ற ஸஹஜ ஸாமர்த்யமும் எழுதி முடியா. அவர் உபந்யாஸத்தைக் கேட்பதற்குப் பண்டித பாமரர்கள் அனைவரும் வந்திருந்தனர். எல்லோர்க்கும் எளிதாய் விளங்கும்படி விஶதமாகவும் இனிதாகவும் அவர் உபந்யஸித்ததைக் கேட்டு ஸந்தோஷப்படாதவர் ஒருவரும் இல்லை. அந்த ஸ்வாமியை மறுபடியும் வரவழைத்து, பகவத் விஷயம் முழுதும் கேட்கவேண்டு மென்று இங்குள்ளார் மிக்க ஆவலுடன் இருக்கிறார்கள்.

ஸி. கோபாலாசார்யர்,
Secretary, Sri Vaishnava Siddhanta Sabha,
Tirupathi.

திருப்பதி,
11—4—16.

### நடந்த உபந்யாஸத்தின் விவரம்.

**முதல் நாள்:—**இந்தப் பூலோகத்திலிருக்கும் ஸகல ஜநங்களும் அடைய வேண்டிய ஶாஶ்வதமான ப்ரயோஜநம் மோக்ஷம். அதை அடைவதற்கு உபாயம், பக்தி ப்ரபத்தி என்னும் இரண்டே. அவைகளில், பக்தியை மோக்ஷத்திற்கு உபாயமாகக் கொண்டவர்கள் பக்தர்கள் என்றும், ப்ரபத்தியை உபாயமாகக் கொண்டவர்கள் ப்ரபந்நர்கள் என்றும் சொல்லப்படுகிறார்கள். இவ்விருவரும் பகவானுடைய குணங்களை ஸதா அநுஸந்தாநம் செய்துகொண்டே இருக்கவேண்டும். ஏனெனில் பக்தர்களுக்குப் பகவானிடத்தில் ப்ரீதியாகிற பக்தி தினந்தோறும் வளர்ந்துவரவேண்டியது அவ

ஶ்யமன்றோ? ப்ரபந்நர்களுக்கும் "நிஜகர்மாதி₃ ப₄க்த்யந்தம் குர்யாத் ப்ரீத்யைவ காரித:" என்று ஸ்ரீ ஆளவந்தார் கீதார்த்த ஸங்க்ரஹத்தில் அருளிச்செய்தபடியே, நித்ய கர்மங்களையும் பகவானிடத்தில் உண்டாகிய ப்ரீதியினால் கைங்கர்யரூபமாய்ச் செய்யவேண்டுமென்று விதிக்கப் பட்டிருப்பதனால், அப்படிப்பட்ட ப்ரீதி உண்டாவதற்கு மேற்கூறிய பகவத் குணாநுஸந்தாநம் அவஶ்யமே. அப்படிக் குணாநுஸந்தாநம் செய்வதற்கு முக்யமான ஸாதநம் ஆழ்வார்கள் அருளிச்செய்த திவ்ய ப்ரபந்தங்களே. இது "தொண்டர்க்கமு துண்ணச்சொன் மாலைகள்சொன் னேன்," "சீர் கலந்த சொல்நினைந்து போக்காரேல் சூழ்வினையி னாழ்துயரை, என்னினைந்துபோக்குவரிப் போது?", "இவ்வர்த்தங்களைச் சித்த ரஜ்ஞநத்தோடு எளிதாகத் தெரிவிப்பதில் தொண்டர்க் கமுதுண்ணலான அருளிச்செயல்கள் ப்ரதாநம்" என்றிவை முதலிய பூர்வாசார்களின் ஸ்ரீ ஸூக்திகளினால் வ்யக்தமாக ஏற்படுகிறது. ஆகையினால் தான் ஸ்ரீ பாஷ்யகாரர், தம்முடைய சரம தசையில் தம்முடைய பிரிவினால் முதலிகள் கலங்கிநிற்க, ப்ரபந்நர்கள் ப்ரபத்திக்குப் பிறகு செய்யவேண்டிய கார்யங்கள் இன்னின்னவை என்று நிரூபிக்கும் ஸந்தர்ப்பத்தில் "ஸ்ரீ பாஷ்யத்தை வாசித்து ப்ரவர்த்திப்பித்தல், அதற்குச் சக்தியில்லையாகில் அருளிச்செயல்களைக் கேட்டு ப்ரவர்த்திப்பித்தல், அதற்கும் ஶக்தி இல்லையாகில் த்வயத்தின் அர்த்தாநுஸந்தாநம் செய்தல், அதற்கும் ஶக்தி இல்லையாகில் உகந்தருளின நிலங்களில், அமுதுப்படி, சாத்துப்படி, திருமாலை, திருவிளக்கு ஸமர்ப்பித்தல், திருநந்தவநம் உண்டாக்குதல் முதலிய கைங்கர்யம் செய்தல், அதற்கும் ஶக்தி இல்லையாகில், என்னுடையவனென்று அபிமானித் திருப்பானொரு பாகவதனுடைய அபிமாநத்தில் ஒதுங்கி வர்த்தித்தல் செய்ய வடுக்கும்" என்று அருளிச்செய்தார். இவ்விடத்தில் ஸ்ரீ பாஷ்யத்தில் ஶக்தி இல்லாதவர்களுக்கு மாத்திரம் பகவத் விஷயம் அவஶ்யம் என்பதில் தாத்பர்யமில்லை. ஸ்ரீ பாஷ்யம் முதலிய க்ரந்தங்களைப் பரிசயம் செய்வது புத்திக்கு ஶ்ரமத்தை உண்டுபண்ணு மாகையினாலும், அருளிச்செயல்களிலே போல் அந்த பகவானுடைய குணங்கள் ஸ்பஷ்டமாகச் சொல்லப்படாமையினாலும், அதைப் பரிசயம் செய்யத்தகாத அநத்யயந காலங்களிலும் எல்லா ப்ரபந்நர்களுக்கும் இந்த பகவத் விஷயமே உபஜீவ்யம் என்பதில் தாத்பர்யம். இவ்வர்த்தத்தைத் திருவுள்ளம் பற்றியே நம் தேசிகனும், "ஊட்₄வா ஸார வ்யவஸ்தா₂ம் விக₄டந கடி₂நாம் கா₃ட₄மீமாம்ஸயைவ ஸ்வாத்₃யா ஸாரஸ்ய பத்₃யை: நவநவ ரஸதா₃ம் நாத₂வாசாம் ததா₂த்₃யா: தத்₃வர்ணா: ஸ்பஷ்டமத ஸஞ்ஜீவநீ ஸபரிக்ஷா மாயா தா₃த்₃யா தா₃வஸி ரஸிக ஹ்ருதா₃ம் தாரணீ யாரணீயா ॥" என்று அருளிச்செய்திருக்கிறார்.

இதற்குப் பகவத்விஷயம் என்கிற பெயர் பெரியோர்களால் வழங்கப் பட்டு வருகிறது. இதர க்ரந்தங்களில் அநேகம், பகவானுடைய குணங்களைச் சொன்னாலும், அவைகள் வேவ்வேறு விஷயங்களை நிரூபிப்பதற்காக ஏற்பட்டு இடையிடையே தாத்பர்யங்களைக் கொண்டு அப்படி நிரூபிக்கக் கூடியவைகளாக இருக்கின்றன. இந்த க்ரந்தமோ, பகவானுடைய குணங்களையே முக்யமாகவும் ஸ்பஷ்டமாகவும் நிரூபிப்பதற்காகவே ஏற்பட்டதென்பது இக்ரந்தத்தின் ஆரம்பத்தில் "உயர்வற வுயர்நல முடையவன்" என்பதனாலேயே தெரிவிக்கப்படுகிறது. இது தான் 'பகவாந்' என்னும் பதத்திற்கு அர்த்தம். "ஜ்ஞாநசக்தி பலைச்வர்ய வீர்யதேஜாம்ஸ்யசேஷத: | பகவச்சப்தவாச்யாநி விநா ஹேயைர்குணாதிபி:||" என்றல்லவோ புராணத்தில் அந்தப் பதத்திற்கு அர்த்தம் சொல்லப்பட்டது. அந்த அர்த்தம் முழுதும் இந்த முதல் பாட்டின் முதலடியில் ஸங்க்ரஹமாக அருளிச்செய்யப்பட் டிருப்பதனால் இந்தத் திருவாய்மொழி முழுதும் 'பகவாந்' என்னும் பதத்திற்கு விவரணமானதுபற்றி இதற்குப் பகவத் விஷயம் என்னும் பெயர் வந்ததென்று நினைக்க இடமுண்டாகிறது. இவ்வர்த்தத்தை நம் ஆசார்யனும் "ஷட்குணிதே பாஷ்யஸஹஸ்ரம் [illegible]" என்கிற ஶ்லோகத்தில் அருளிச்செய்திருக்கிறார்.

இக்ரந்தத்தை அருளிச்செய்தவர் நம்மாழ்வார். ஆழ்வார் என்றால், பகவானுடைய குணங்களின் அநுபவத்தில் ஆழ்ந்துகொண்டிருப்பவர்கள் என்று அர்த்தம். அன்றிக்கே, கர்மங்களால் அளவுபட்டிருக்கும் நம்முடைய ஜன்மங்களை விட, பகவானுக்கு அளவிட முடியாத கருணையினால் உண்டாகும் ஜன்மங்கள் பல என்பது "பஹூநி மே வ்யதீதாநி" என்கிற பகவத்கீதையின் ஶ்லோகத்தின் கருத்து. "அருள்கொண் டாயிர மின்தமிழ் பாடினான், அருள்கண் டீரிவ் வுலகினில் மிக்கதே" என்கிறபடி பகவானுடைய அந்த கருணையை விட எத்தனையோ மடங்கு அதிகமான கருணையை உடையதாயிருக்கும் ஆழ்வாரது ஜன்மம். ஆகையால் பகவானுடைய ஜன்மங்களை விட ஆழ்வாரது ஜன்மம் உயர்ந்தது. ஆகவே, ஜன்ம பரம்பரைகளினால் மற்றெல்லாரையும் விட ஆழ்ந்துபோகிறவர் என்று அர்த்தமாகவுமாம். இது "ஊர்த்வமேவ நிஷீ [illegible]" என்கிற ஶ்லோகத்திலும் வ்யக்தமாய் அருளிச்செய்யப்பட்டது.

**இரண்டாவது நாள்:** — இந்த நம்மாழ்வார் அருளிச்செய்த ப்ரபந்தங்கள், திருவிருத்தம், திருவாசிரியம், பெரியதிருவந்தாதி, திருவாய்மொழி என நான்கு. முதல் ப்ரபந்தமாகிய திருவிருத்தத்தில், ஸம்ஸாரம் மிகவும்

கொடியது என்பதை எம்பெருமானிடத்தில் விண்ணப்பம் செய்கிறபடியி னல் 'வ்ருத்தம்' என்னும் பதம் 'விருத்தம்' எனத் திரிந்து, அதனல் நட ந்த ஸமாசாரத்தைத் தெரிவிக்கிறது என்று அர்த்தமாகிறபடியால், ஸம் ஸாரம் நமக்கும் விரோதம் என்பது ஏற்படுகிறது. 'திருவிருத்தம்' என் பதில் 'திரு' என்பது மேன்மையைக் காட்டும். திருவாசிரியத்தில் இவரு டைய ஆர்த்தியைக் கண்டு பெருமாள், தம்முடைய திருமேனியைக் காட்ட அதை அநுபவிக்கிருர். பெரிய திருவந்தாதியில் இப்படிப் பகவானுடைய திருமேனியைக் கண்டதனல், அதைப் பரிபூர்ணமாய் அநுபவித்தல்லது தரிக்க வொண்ணுத த்வரை உண்டான தென்பது தெரிவிக்கப்படுகிறது. அந்த மிகுந்த த்வரையினல் பெரிய ஆர்த்தியோடே அவனை வளைத்துக் கூப்பிட்டுத் தாம் புருஷார்த்தத்தை அடைந்தமை திருவாய்மொழியில் தெரி விக்கப்படுகிறது. இவ்வர்த்தத்தை நம்தேசிகனும், "आदौ दृष्ट्वीय वृजं स्वकाले च विषये संसृतेस्तृष्णहानं दैवहीयैक स्वाराध्या दृष्टिमोहं स्ववरपरवश स्पष्टदृष्टं । तादृग्भीतस्य स्वीयां हृदयनयनयोस्सौमनस्यां परत्वं प्राप्तिं स्वयमपि हृदयगतं वाणिक्यं शठारिः ॥" என்று அருளிச்செய்தார். அன்றிக்கே, திருவிருத்தம் பரபக்தியையும், திருவாசிரி யம் பரஜ்ஞாநத்தையும், பெரிய திருவந்தாதி பரமபக்தியையும், திருவாய் மொழி ப்ராப்தியையும் சொல்லுகிறதாகவுமாம். அதுவுமன்றிக்கே, திருவி ருத்தத்தில், பரதனைக் கைகேயி 'ராஜந' என்று அழைத்த பொழுதும், ப்ராதஃகாலத்தில் ராஜோபசாரங்களைக் கேட்டபொழுதும் அந்தப் பரதாழ்வா னுக்கு உண்டான தசையையும்; திருவாசிரியத்தில் பெருமாள் சித்ரகூடத் தில் வஸிக்கிருர் என்பதைக் கேட்டு த்வரித்துக்கொண்டு நடந்த தசையை யும்; பெரிய திருவந்தாதியில், நந்திக்ராமத்தில் பெருமாளுடைய வரவை எதிர்பார்த்து நாள் எண்ணிக்கொண்டிருந்த தசையையும்; திருவாய்மொழி யில், அந்தப் பகவானுடைய திருவடியில் அயத்ந லப்தமாய் யதா மநோ ரதமான கைங்கர்யம் செய்யப்பெற்ற தசையையும் போல, இவ்வாழ்வார் தம்முடைய தசையைப் பேசுகிருராகவுமாம்.

இந்தத் திருவாய்மொழியில் ஆயிரம் பாட்டுக்களினும் எம்பெருமானை அடைவதற்கு அவனே உபாயம் என்கிற அர்த்தமே நிருபிக்கப்படுகிறது. அதற்கு ஸாதகங்களாகப் பத்துப் பத்துக்களினும் ஸௌலப்யத்வம் முதலிய குணங்களை நிருபிக்கிருர். அந்த ஸௌலப்யத்வாதி குணங்களை நிருபிப்பதற்காக ஒவ்வொரு பத்திலும் பத்துத் திருவாய்மொழிகளினல் பரத்வம் முதலிய குணங்களை நிருபிக்கிருர்.

இதில் சொல்லப்பட்ட எம்பெருமான்தன்னை அடைவதற்கு அவனே உபாயம் என்னும் அர்த்தமே வேதாந்தங்களிலும் ஓதப்படுகிறபடியால், உபய வேதாந்தங்களென்று இவை இரண்டும் சேர்த்துச் சொல்லப்படுகின்றன. இதுவும் "ஸ்வப்ராப்தௌ ஸ்வாயநஞ்ச ஸ்வபதி: பரம் ப்ரஹ்ம ஸூத்ராவலி விஷ்ணும்" என்று ஸ்ரீ பாஷ்யத்தைப்பற்றி அதிகரணஸாராவளியிலும் "தேவ: ஸ்ரீமாந் ஸ்வஸித்தே: கரணமிதி வதந் ஹேதுக: ஸ்யாத் ஸமேதோ ஸ்வவ்யக்தாதீந் உபாயாந் ப்ரத்யபிஷு ஸமேதே வத்ஸ்த தத்ஸ்வநாயாந் । ஸந்திக்தஸ்யாத் ஸ்வாகாங்க்ஷித உபாக ம: ஸேவாய தஸ்மை ஜயாமை தத்த்வதாயாமநோஹநா நாஸ்ந விஷய திதஸ்ய வஸ்துப: வஸ்துஸம்வ்யா: ।" என்று இப்பகவத் விஷயத்தைப் பற்றி த்ரமிடோபநித் தாத்பர்ய ரத்நாவளியிலும் நம் ஆசார்யனால் வெளியிடப்பட்டது.

அதில் திருவிருத்தத்தில் முதற்பாட்டில் "பொய்ந்நின்ற ஞானமும்" என்று ஆரம்பித்து மேலே தம்மால் ப்ரார்த்திக்கப்படுகிற எல்லா அம்ஸங்களுக்கும் ஸங்க்ரஹமாக எம்பெருமான் இந்த ஜீவாத்மாவிற்கு முன்பு செய்த உபகாரங்களை அநுவாதம் செய்துகொண்டு, இனிச் செய்யவேண்டிய உபகாரங்களை ப்ரார்த்திக்கிறார். அந்தப் பாட்டில் சொல்லப்படுகிற முன்னுபகாரம் பின்னுபகாரம் என்கிற பிரிவுகளை "உபகார ஸங்க்ரஹம்" என்னும் ரஹஸ்யத்தில் மணிப்ரவாளரூபமாக நம் ஆசார்யன் அருளிச்செய்துள்ளார். அப்படியே திருவாசிரியத்தில் "செக்கர் மாமுகில்" என்று ஆரம்பித்துத் திருமேனியின் ஸௌஷ்டவத்தையும் அதற்கு உபயோகமான குணங்களையும் அநுபவித்தார். பெரிய திருவந்தாதியில் "முயற்றி சுமந்தெழுந்து" என்று ஆரம்பித்துத் தம்முடைய திருவுள்ளம் தமக்கு முன்பே அவன் திறத்தில் ப்ரவணமானபடியை அநுஸந்தித்துத் தம்மையும் சேர்த்துக்கொண்டு, பகவானை அநுபவிக்கப் பாராயென்று அருளிச்செய்ததனால் தமக்கு உண்டான த்வரையின் மிகுதியைக் காண்பித்தார். இத்திருவாய்மொழியில் அந்த த்வரையின் மிகுதியால் அவனை ஆணையிட்டு வளைத்துக் கூப்பிட்டுப் பரிபூர்ணாநுபவம் பெற்றுத் தாம் க்ருதார்த்தமான படியை அருளிச்செய்து ப்ரபந்தத்தைத் தலைக்கட்டுகிறார்.

**மூன்றாவது நாள்** :—முதற் பத்தில் பகவானே ஆஸ்ரயிக்கத்தக்கவனாகையால் அவனே உபாயம் என்று அருளிச்செய்கிறார். அதற்குக் காரணமாகப் பரத்வம் முதலிய பத்துக் குணங்களைப் பத்துத் திருவாய்மொழிகளினால் அருளிச்செய்கிறார். முதல் திருவாய்மொழியில் அவனே எல்லாவற்றையும்விட மேலானவன் என்றும், இரண்டாம் திருவாய்மொழியில் பக்ஷ

பாதமில்லாதவனென்றும், மூன்றாம் திருவாய்மொழியில் ஸுலபனென்றும், நான்காம் திருவாய்மொழியில், ஆஶ்ரிதர்கள் செய்யும் அபராதத்தைப் பொறுக்கும் ஸ்வபாவமுடையவனென்றும், ஐந்தாம் திருவாய்மொழியில் ஸுஶீலன்: அதாவது தான் மிகவும் உயர்ந்தவனா யிருந்தபோதிலும் மிகவும் தாழ்ந்தவர்களிடத்தும் வ்யத்யாஸமில்லாமல் கலக்கும் ஸ்வபாவத்தை உடையவன் என்றும், ஆறாம் திருவாய்மொழியில் ஸுலபமாய் ஆராதநம் செய்யக்கூடியவன்: அதாவது, தன் ஶக்திக்கு அநுகுணமாகக் கிடைத்த பொருளைக் கொண்டு பக்தி ஒன்றை மாத்ரம் முன்னிட்டு எவர்களாலும் ஆராதநம் செய்யக்கூடியவ னென்றும், ஏழாம் திருவாய்மொழியில் அப்படி அவனை ஆஶ்ரயிப்பது மிகவும் ஸுகமாயிருக்கும் என்றும், எட்டாம் திருவாய்மொழியில் வாத்ஸல்யத்தை யுடையவன்: அதாவது தன்னை ஆஶ்ரயித்தவர்களிடத்தில் இருக்கிற ஜாதி குணம் முதலிய வ்யத்யாஸங்களைப் பாராதவ னென்றும், ஒன்பதாம் திருவாய்மொழியில், தம்முடைய அநுபவம் ஜீர்ணமாக ஜீர்ணமாக மேலே இன்னும் அநுபவத்தைக் கொடுப்பவன் என்றும், பத்தாம் திருவாய்மொழியில் இப்படித் தான் பக்தர்களுக்கு அநுக்ரஹம் செய்வதைத் தன்னுடைய ப்ரயோஜநமாக எண்ணியிருப்பவ னென்றும், ஆகையினால் அவனே ஆஶ்ரயிக்கத்தகுந்தவன் அவனே உபாயம்என்றும் அருளிச்செய்தார். இந்த அர்த்தங்கள் எல்லாவற்றையும் ஸங்க்ரஹித்து, முதல் பாட்டில் அருளிச்செய்கிறார். அதில் "உயர்வற" என்னும் முதல் அடியினால் பரத்வமும், "மயர்வற" என்னும் இரண்டாவது அடியினால் 3,4,5,6 - திருவாய்மொழிகளின் அர்த்தங்களும், இரண்டாவது மூன்றாவது அடிகளினால் இரண்டாம் திருவாய்மொழியின் அர்த்தமாகிய பக்ஷபாத மில்லாமையும், எட்டாம் திருவாய்மொழியின் அர்த்தமும், "துயரறு சுடரடி" என்கிற நான்காம் பாதத்தினால் இதர திருவாய்மொழிகளின் அர்த்தங்களும் ஸங்க்ரஹிக்கப்பட்டன. இந்தப் பத்தில் நாம் முக்யமாய் அறியவேண்டியது, பகவான் ஒருவனே ஆஶ்ரயிக்கவேண்டியவன் என்பது. அவனை ஆஶ்ரயித்தால் ஸர்வ பாபங்களும் நிவ்ருத்தியாகும்; ஸகல நன்மைகளும் உண்டாகும்; மேலே நடப்பதெல்லாம் நன்மையாக இருக்கும். அப்படி அவனை ஆஶ்ரயிப்பதற்குக் காலம் முதலிய நியமங்கள் வேண்டா. வேறு புண்ய பாபங்களினாலாவது தடுக்கவும் அழிக்கவும் ஒண்ணாது. மரண மடைவதற்குள் எந்த இடத்திலாவது எந்தக் காலத்திலாவது எம்பெருமானைச் சரணமாக ஆஶ்ரயிப்பது உசிதம். இதை "நாளு நின்றடும் நம பழமை" என்கிற பாட்டில் இவர்தாமே அருளிச்செய்தார். இந்த அர்த்தத்தையே ஸ்ரீ ஆளவந்தாரும் "த்வதங்க்ரிமுத்திஶ்ய" என்கிற ஶ்லோகத்தில் விஶதமாக நிரூபிக்கிறார். இந்த ஶ்லோகத்தின் அர்த்தம் "அஞ்ஜலி வைபவம்" என்னும் ரஹஸ்யத்தில் மணிப்ரவாளரூபமாக நம் ஆசார்யனால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

---